# கலாதீபம்

කලාදීබම් KALADEEPAM

தீபம் : 01 01.11.2020 சுடர் : 02


# கலாசாலைகளின் வரலாற்றில் முதலாவது மின்சஞ்சிகை கலாதீபம்

### பிரபல ஆசான் வி.எஸ்.குணசீலன் அவர்களால் வெளியிடப்பட்டது

### முன்மாதிரியான வெளியீடு என ஆசிரிய கல்விப் பணிப்பாளர் ஆர்.எம்.எம்.ரத்நாயக்கா பெருமிதம்



இலங்கையில் தற்போதுள்ள எட்டு ஆசிரியர் கலாசாலை களின் வரலாற்றில் முதலா வது மின்சஞ்சிகை என்ற பெருமையைப் பெறுகின்ற கலாதீபம் சஞ்சிகையின் மின்னிதழும் வன்பிரதி யும் கடந்த 05.10.2020 கலாசாலையில் இடம்



பெற்ற ஆசிரியர்தின விழாவின்போது வெளி யிட்டு வைக்கப்பட்டது. சஞ்சிகையின் முதற்பிர தியை அதிபர் வீ.கருணலிங்கம் முன்னிலையில் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு

தொடர்ச்சி பக்-02

## ஆசிரிய கலாசாலையின் நேரடிப் போதனை இடைநிறுத்தம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நேரடி போதனை நடவடிக்கைகள் கோப்பாய் பிரதேச மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமை வாகவும் மத்திய கல்வியமைச்சின் வழிகாட்டலுட னும் கடந்த முதல் 09.10.2020 இடைநிறுத்தப்படு

தொடர்ச்சி பக்-02

## கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற ஆசிரியர் தினவிழா



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆசிரி யர் தினவிழாவும் கலாசாலையின் மாத சஞ்சிகை யானகலாதீபம் இதழின் வெளியீட்டு நிகழ்வும் 05.10.2020 காலைகலாசாலையின் ஜெகன்மோகினி

தொடர்ச்சி பக்-02

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி நிர்வாக அலுவலகம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல் லூரி கொவிட் 19 தனிமைப்படுத்தல் மையமா கக் கடந்த ஒக்டோபர் 12 ஆம் திகதி முதல் செயற்பட்டுவரும் நிலையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தற்காலிக நிர்வாக

தொடர்ச்சி பக்-02

## புதிய கல்வி ஆண்டுக்கான பதிவுகள் காலவரையறையின்றி ஒத்திவைப்பு

ஆசிரிய கலாசாலையின் 2020 - 2021 கல்வியாண்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கடந்த அக்டோபர் 06 ஆம் திகதி கற்கைநெறிக்கான பதிவுகள் மேற்கொள் ளப்பட்டு அன்றே கற்கைநெறிகள் ஆரம்பமாக இருந்த சூழலில் நாட்டில்

தொடர்ச்சி பக்-04

**கலாசாலைன் வரலாற்றில்...**

இருந்த ஓய்வு நிலை விரிவுரையாளரும் பிரபல உயிரியல் ஆசானுமாகிய வி.எஸ்.குணசீலன் வெளியிட்டு வைத்தார். சஞ்சிகையின் முதற்பிரதியை கலாசாலையின் சிரேஸ்ட மாணவ முதல்வர்களான தி.திலீபன், தர்சினி சிவஞானம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இதன்போது கலாதீபம் சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினர் மேடையில் பிரசன்ன மாகியிருந்தனர்.

தொடர்ந்து கலாதீபம் ஆயிரத்தும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு இணையவழியில் கிடைக்குமாறு சமூக ஊடகங்கள் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கலாதீபம் மின்சஞ்சிகை வெளியீடு ஒரு முன்மாதிரியான செயற்பாடு எனவும் வளங்கள் போதாது எனச் சோர்ந்துவிடாது உள்ள வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பாராட்டத்தக்க நடவடிக்கை எனவும் இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப் பணிப்பாளர் ஆர்.எம்.எம். ரத்நாயக்கா கலாசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரிய கல்வி நிர்வாகப் பிரிவு அதிகாரிகளுக்கான வாட்ஸ்அப் இணையக் குழு மத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வி...**

அலுவலகம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஜெகன்மோகினி மண்டபத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம் அவர்களின் வழிகாட்டலில் அலுவலர்கள் தமது நிர்வாகம் சார்ந்த பணிகளை கலசாலையில் இருந்தவாறு மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை கல்லூரியின் மாணவ ஆசிரியர்கள் பாதுகாப்பாகத் தமது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மத்திய கல்வி அமைச்சின் ‘அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை’ (NSBS) செயற்றிட்டத்தின் வடமாகாணத்திற்கான அலுவல கத்தின் தற்காலிக நிலையமும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இயங்கத் தொடங்கியுள்ளது. எந்திரி ஜெ.வாசுதேவன் அவர்களின் வழிப்படுத் தலில் அலுவலர்கள் கலாசாலையின் சங்கீதபாட விரிவுரை மண்டபத்தைத் தமது அலுவலகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இது நாள் வரை இவ்வலுவலகம் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இயங்கி வந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆசிரிய கலாசாலையின்...**

கின்றன என்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் தெரிவித்தார். இதற்கமைவாகக் கலாசாலையில் இருந்து இணையவழிக் கற்பித்தல் மேற்கொள்ளப்படும் என்றும் ஆசிரிய மாணவர்கள் வீட்டில் இருந்தவாறு வேலை நேரத்தில் கற்றலை மேற்கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கலாசாலைகளில் பயிலும் 380 ஆசிரிய மாணவர்கள் தூர இடங்களிலிருந்து பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தி கலாசாலைக்கு வந்து செல்கின்றமையால் இந்தமுடிவு எடுக்கப்பட்டதாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

**கலாசாலையில் சிறப்புற...**

மண்டபத்தில் அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராககலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலனும் அவரது துணைவியார் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய தலைமையகப் பிரதி முகாமையாளர் கலாவாணி குணசீலனும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் கலாசாலையின் விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்களால் தீபம் வழங்கி வரவேற்கப்பட்டனர். நிகழ்வின் சிறப்பம்சமாக கலாதீபம் என்ற சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது. சஞ்சிகையை பிரதம விருந்தினர் வி.எஸ்.குணசீலன் வெளியிட்டு வைக்க கலாசாலையின் சிரேஸ்ட மாணவ தலைவர்களான திருநாவுக்கரசு திலீபன், தர்சினி சிவஞானம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். கலாசாலையின் விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள் அனைவருக்கும் ஆசிரியர் தினச் செய்தி பொறிக்கப்பட்ட கோவை உறைகளை (File Cover) வழங்கிக் கௌரவித்தனர். இதேவேளை ஆசிரிய மாணவர்கள் விரிவுரையாளர்களுக்கு பேனாவைக்கும் தாங்கி வழங்கி மதிப்பளித்தனர்.

விரிவுரையாளர்கள் வழங்கிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஆசிரிய மாணவர்களால் மதிய விருந்துபசாரமும் வழங்கப்பட்டது. இவ்வாண்டுக்குரிய ஆசிரிய தினம் யுனெஸ்கோவின் வழிகாட்டலுக்கு அமைவாக நெருக்கடிச் சூழலில் தலைமைதாங்குபவராகவும் எதிர்காலத்தை மீளக் கட்டமைப்பவராகவும் ஆசிரியர் என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கலாதீபம்

කලාදීපම් KALADEEPAM

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின்
மாதாந்த மின்னிதழ்.

A monthly e magazine of Kopay Teachers' college.

කෝපායි ගුරු විද්‍යාලයීය
මාසික විද්‍යුත් සඟරාව


## நமது நோக்கு

### கற்றல் முறையில் மாற்றம் தேவை

நவராத்திரி ஆயுத பூசையில் புத்தகத்தினை வைத்துப் பூசை செய்வதா? செல் போனை வைத்துப் பூசை செய்வதா? என்று நண்பர் ஒருவர் விகடமாகக் கேட்டார். அதில் நியாயம் இல்லாமலும் இல்லை. கொவிட் 19 அபாயத்தின் காரணமாக நாடு முழுவதும் உள்ள பாடசாலைகள் தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆசிரிய கலாசாலைகளின் நேரடிப் போதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள் ளன. ஆங்காங்கே வசதி படைத்த நிறுவனங் கள் சூம் மீற்றிங், மைக்ரோசொப்ற் ரீம், கூகுள் மீற், ஜெற்சி முதலிய செயலிகளின் வாயிலாக மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இந்த வசதிகள் கைவரப் பெறாதவர்கள் வாட்ஸ் அப், வைபர் முதலிய சமூக ஊடகங்கள் வாயிலாகத் தகவல் அனுப்பும் பொறிமுறையில் பாடக்குறிப்பு களைப் பரிமாறி வருகின்றனர். இதற்கெல் லாம் ஊடகமாகப் பலரிடம் காணப்படுவது திறன் கைப்பேசியே ஆகும்.

ஆசிரிய கலாசாலைகளைப் பொறுத்த வரையில் இனிவரும் காலத்தில் மூடப்படப் போகும் நிறுவனங்கள் என்ற கருத்தே நிலவு கின்றது. இதனால் தொழிற்பாடங்கள் தவிர்ந்த நெறிப்பாடங்களுக்கு 2009 ஆம் ஆண்டுக் குப் பின்னர் பாட உள்ளடக்கத்திலோ கற்றல் கற்பித்தல் உபாயங்களிலோ மாற்றங்கள் ஏதும் ஏற்படுத்தாத துரதிஷ்டவசமான நிலைமை காணப்படுகின்றது. 2023 இல் நாடு முழுவதி லும் கல்வி சார்ந்த சீர்திருத்தம் எதிர்பார்க்கப் படும் நிலையில் - கல்வியியல் கல்லூரிகளில் கல்விமாணிப்பட்டக் கற்கைநெறி அமுலாகும் நிலையில் ஆசிரிய கலாசாலைக் கல்வியும் வேற்றுருவைக் கொள்ளவேண்டிய காலத் தின் கட்டாயம் காணப்படுகின்றது. தற்போது

தொடர்ச்சி பக்-04

[redacted]


**கலாதீபம் குழு**

**நெறிப்படுத்தல்**

திரு. வீரகத்தி கருணலிங்கம்
(அதிபர்)

**வள ஆலோசனை**

திரு. தங்கராசா கோபாலகிருஷ்ணன்
(உப அதிபர்)

திருமதி சிவசக்தி இராதாகிருஷ்ணன்
(துணை அதிபர்)

**பிரதம ஆசிரியர்**

திரு. சந்திரமௌலீசன் லலீசன்
(பிரதி அதிபர்)

**ஆசிரியர் குழு**

திரு. கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்)

செல்வி. மாலதி பத்மநாதன்
(விரிவுரையாளர்)

திரு. வேலும்மயிலும் நந்தகுமார்
(விரிவுரையாளர்)

திருமதி சிவசக்தி ஜெயராஜா
(விரிவுரையாளர்)

திரு இராமலிங்கம் இளங்கீரன்
(ஆசிரிய மாணவர் – ஆரம்பக்கல்வி)

செல்வி நிவேதா சத்தியசீலன்
(ஆசிரிய மாணவி — த.தொ.தொழினுட்பம்)


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையரா வர். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக் கள் கலாசாலையின் கருத்துக்களாகக் கொள் ளப்படமாட்டா.


**வெளியீடு**

கோப்பாய் ஆசிரிய கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.

தொலைபேசி : 0212230323

# அன்ன பூரணியாக விளங்கியவர் துணை அதிபர் சிவசக்தி

## விரிவுரையாளர் கழகத் தலைவர் புகழாரம்



தாய்மைப் பண்புடன் அன்னபூரணியாக விளங்கியவர் இளைப்பாறுகை பெறும் சிவசக்தி இராதாகிருஸ்ணன் ஆவார் என்று புகழாரம் சூட்டினார் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் கழகத் தலைவர் க.செந்தில்குமரன்.

துணை அதிபரின் பிரிவுபசார நிகழ்வு பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் யோகலிங்கேஸ்வரர் ஆலய மண்டபத்தில் கடந்த 23.10.2020 வெள்ளிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்ட போதே விரிவுரையாளர் க.செந்தில்குமரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் கலாசாலையில் பெண் ஆசிரியைகளின் ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதில் உரிய வழிகாட்டல்களை வழங்கி அவர்களை வழிப்படுத்தியவர் சிவசக்தி அம்மையார். அம்மையார் என்ற சொல்லுக்கு இலக்கணமான தாய்மைப் பண்பு அவரிடம் காணப்படுகின்றது.

**க.செந்தில்குமரன்**
**விரிவுரையாளர் கழகத் தலைவர்**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**



உடற்கல்விப் பாடம் சார்ந்த கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தரான இவர் பட்மின்ரன் விளையாட்டில் நிபுணத்துவம் பெற்றவர். எல்லோரையும் அரவணைத்து அன்புகாட்டும் ஆளுமை மிக்கவர் என்று குறிப்பிட்டார். கொவிட் 19 தொற்று அபாயம் காரணமாக மாணவர் வரவு நிறுத்தப்பட்ட சூழலிலும் மாணவர் மன்றப் பிரதிநிதிகள் மற்றும் உடற்கல்வி நெறிசார்ந்த பிரதிநிதிகள் என முப்பதுக்கும் மேற்பட்டோர் கலாசாலைக்கு வருகை தந்து இளைப்பாறுகை பெறும் துணை அதிபரைக் கௌரவித்தனர். கலாசாலையின் விரிவுரையாளர்களும் நிகழ்வில் பிரசன்னமாகியிருந்ததுடன் வாழ்த்துரைகளையும் நல்கினர்.

### கற்றல் முறையில்...

ஆசிரிய கலாசாலைகளில் கல்வி கற்போரின் சராசரி வயது 35 இற்கும் 40 இற்கும் இடைப்பட்டதாகக் காணப்படுகின்றது. இவர்களில் பலர் பல்லாண்டுகளாகத் தொண்டர் ஆசிரியர்களாகத் தமது சேவையை நல்கியிவர்களாவர். நாற்பதை அண்மித்த வயது நிலையில் கல்விசார் இணைய தொழினுட்ப சாதனங்களுடன் இணையமுடியாது என்ற மனநிலை கணிசமானோரிடையே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இந்த எண்ணம் அறவே களையப்பட வேண்டும். காலத்தின் தேவை விரும்பியோ விரும்பாமலோ அனைவரையும் இணையவழிக் கல்விக்குள் உட்புகுத்தி உள்ளது.

கருவறைமுதல் கல்லறை வரை கல்வி என்ற நிலையில் இணையவழிக் கல்வியின் வாயிலாகத் தொடர்ந்து கல்வியை முன்னெடுக்க வேண்டும். அதற்கு ஏற்றாற்போல் நாம் நம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும்.

'முயன்றால் முடியாதது என்று ஒன்றில்லை'

### புதிய கல்வி...

ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்று அபாய நிலைமை காரணமாகப் பதிவுகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் ஆசிரிய நிர்வாகப் பிரிவால் அறிவிக்கப்பட்டுள்ளது. பதிவு மற்றும் கற்கை ஆரம்பம் என்பவற்றிற்கான புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிள்ளைகளின் உளநெருக்கீடுகளை வினைத்திறனுடன் கையாள்வதில் ஆசிரியரது வகிபாகம்

**கோப்பாய் ஆசிரிய கலாசாலையால் முன்னெடுக்கப்பட்டு வரும் இணையவழிக் கருத்தரங்கில் (webinar) புதன்கிழமை 07.10.2020 இரவு 7.30 மணி தொடக்கம் 8.30 மணிவரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமுதாய மருத்துவத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் குடும்ப நல வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.குமரன் உரையாற்றினார். அவர் ஆற்றிய உரையின் சாரம்சத்தைத் தொகுத்துத் தருகிறார் ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி ராதிகா தங்கராசா.**



[redacted]

**"கற்றவன் தான் சிறந்தவன்"** என்பது சமூகத்தில் நிலவும் நம்பிக்கை. இது வெறுமனே சாதாரணமாக கூறப்படுகின்ற விடயமல்ல கற்றறிந்தவனிடம் சமூகம் எதிர்பார்க்கும் விடயங்கள் ஏராளம். கற்றவன் தன்னிறைவுடையவனாக இருப்பவன். தன்னுடையமன வெழுச்சியை அடக்கியாளத் தெரிந்தவன். தூரநோக்குடையவன், உணர்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்காது சிந்தித்து செயலாற்றக் கூடியவன் (rational thinker). எனவேதான் ஓர் ஆசிரியரிடம் இந்த சமுதாயம் எதிர்பார்ப்பவை எண்ணுக்கணக்கற்றவையாக இருக்கின்றன. அதிலும் ஒருமாணவன் தன் ஆசிரியரிடம் எதிர்பார்க்கும் விடயங்களும் மிகவும் சிறப்பானவை. கற்கும் காலத்தில் அவருக்கான அமுதசுரபி ஆசிரியர்தான். இவ்வாறு மாணவர், பெற்றோர், சமூகம் எனப் பலதரப்பட்டவர்களின் எதிர்பார்ப்புக்களை தன்னிடத்தே கொண்ட ஆசிரியர் வகுப்பறையிலும் அவர்தம் மாணவர்களிடமும் சிறப்பாகச் செயற்படுவது அவசியமானதாகும். ஆசிரியர் தன்னை வளப்படுத்த வேண்டும் அவ்வாறு தன்னை ஆசிரியர் இற்றைப்படுத்தி உடல் உளசமூக ஆரோக்கியத்துடன் தன்னிறைவு பெற்றவராக இருந்தால்தான் அடுத்த தலைமுறையை வளப்படுத்த முடியும். இவ்வகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆசிரியர்கள் மாணவர்களிடத்தில் மிகுந்த கவனம் செலுத்துதல் இன்றியமையாததாகும்.



**ராதிகா தங்கராசா**
**ஆங்கிலப் பிரிவு**
**ஆசிரிய மாணவி**
**(2019/2020)**

### i. மாணவர்களின் கற்றல் முறையை அறிந்தவராக இருத்தல்.

அநேகமாக மாணவர்களின் கற்றல் செயற்பாடு அவரவர் கற்றல் முறைக்கேற்ப மாறுபடு கிறது. மாணவன் தனக்குப் பிடித்தமான முறையினூடாகவே தனது அறிவை பெற்றுக்கொள்ள விரும்புகிறான். அது நிராகரிக்கப்படும் பட்சத்தில் அதிலிருந்து விலகிவிடுகிறான். எனவே ஆசிரியர் மாணவனின் கற்றல் முறையைக் கண்டறிவது இன்றியமையாதது ஆகும்.

கல்வி உளவியலில் கூறுவார்கள் - ஜோன் என்ப வனுக்கு பாடம் புகட்டிகொடுப்பதற்கு பாட விடயம் தொடர்பில் அறிவு பூரணமடைந்திருப்பதோடு ஜோன் பற்றியஉள்ளார்ந்த விடயங்களைத் தெரிந்துவைத்திருக்கவேண்டும். ஜோனைப் பற்றிய அறிதலும் தேவை. இவ் அறிதல் மூலமாகத்தான் அவனுடையகற்றல் முறையையும் இனங்காண வேண்டும்.

படிப்பில் ஆர்வம் இல்லை, விளையாடுகிறார்கள், குழப்படி, ஓர் சிலர்தான் படிப்பார்கள் என்று கூறுகிறார்கள். வெளியில் ஓடி ஆடி விளையாடும் பிள்ளை குழப்படிப்பிள்ளை என்ற மனப்பாங்கு இயல்பில் ஆசிரியரிடம் வருகிறது. இந்த விடயத்தில் ஆசிரியர் அவதானமாக இருக்க வேண்டும்.

கற்றல்முறைபிரதானமாக 03 வகைப்படுகிறது.

1.visual - notes , visual , picture
2. Auditory - by listening
3.Kinaesthetic - by doing

பாடசாலையில் பெரும்பாலும் குழப்படி மாணவர்களாகக் கருதப்படுபவர்கள் “செய்கை மூலம் கற்றலை மேற்கொள்ளும்” (kinaesthetic) மாணவர்களாவர். இவர்கள் ஒன்றைச் செய்து பார்த்து அதன்மூலம் பிழை, சரி என்பவற்றை அறிந்து கற்றுக்கொள்வார்கள். ஆனால் இவர்களில் பெரும்பாலானோர்கள் குழப்படிகாரர்களாகவே ஒதுக்கிவைக்கப்படுகிறார்கள். பல்வேறு தண்டனைகளும் அம்மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இவ்வாறான மாணவர்கள் சாதாரண தரத்துடன் பாடசாலையைவிட்டு இடைவிலகி விடுவார்கள். உண்மையில் இம் மாணவர்கள் செய்முறை மூலமான கற்றலில் ஆர்வமுடைய மாணவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கான சந்தர்ப்பம் சரியாகபயன்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் குழப்படிகாரர்களாக இருக்கிறார்கள். உண்மையில் கெட்டிக்காரர்களாக இருப்பார்கள். ஆனால் கற்கும் முறைவித்தியாசமாக அமையும். (practical based). நடைமுறையில் இம் முறையானகற்றல் முறைகளை ஊக்குவித்தலில் சிரமங்கள் இருந்தாலும் இவை நடைமுறைப்படுத்த வேண்டியவை. இவ்வாறான மாணவர்கள் பொறுமையாக இருக்கமாட்டார்கள், கேள்விகள் கேட்பார்கள்,வேகமாக தொழிற்படுவர். அவர்களுக்கான சரியான வழிகாட்டல் வழங்கப்படாதவிடத்து சமூகத்திற்கெதிரான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள் (anti social activities). அவர்கள் துடிப்பாட்டம் கூடிய அறிவாளிகள் என்பதால் அவர்களை கட்டுப்படுத்துவது சாத்தியமற்றது, எனவே பாடசாலைக் காலத்திலேயே இவை சீர்செய்யப்பட வேண்டும்.

### ii. திறன்கள் வளர்த்தெடுப்பதற்கான களமாகப் பாடசாலையைக் கொள்ளுதல்.

மாணவர்களின் கற்றற் செயற்பாட்டில் பாடசாலை பிரதான இடம் வகிக்கின்றது. மாணவர்களின் திறன்களை வளர்ப்பதற்கான சிறந்த களமாகவும் பாடசாலையே விளங்குகின்றது. மாணவர்களுக்குரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொடுப்பதில் ஆசிரியர் அதிக சிரத்தையுடன் செயற்படவேண்டும். அவர்களுக்கான மரியாதை வழங்கப்பட வேண்டும். இவ்வாறான மாணவர்களைக் கையாள ஆசிரியர் நிச்சயம் பக்குவப் பட்டவராகவும் புத்தாக்க சிந்தனை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

மாணவர்களிடையே வளர்த்தெடுக்கப்பட வேண்டிய திறன்களாவன,

- மென்திறன்கள்
- வன்திறன்கள்

மென்திறன்கள் சிறப்பான முழுமையான வாழ்வுக்கு உதவும். வன்திறன்களை மாத்திரம் வளப்படுத்துவதில் தன்நிறைவு கிட்டாது. மென்திறன்களை மாணவர்களிடத்தில் வளர்த்துக் கொள்ளுமிடத்து

- மற்றவர்களின் வளர்ச்சியில் சந்தோசம் காண்பர்
- நேர்மறைவிடயங்களைஅவதானிப்பர்.
- தொழில்நுட்ப அறிவுடன் குழுவாகச் செயற்படவும், தீர்க்கமான முடிவு எடுக்கக் கூடிய திறனைப் பெறுவர்.
- நேரத்தைச் சிறப்பாக முகாமை செய்வர்.

இதனால் இவ்வாறானதிறனை ஆசிரியர் வளர்த்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் எதிர்கால சந்ததிதியை வளர்த்துக் கொள்ளமுடியும். ஏனெனில் மாணவர்களிடத்தில் மென்திறன்களைப் பாடசாலைதான் வளர்க்கவேண்டும். ஆசிரியர்கள் இதில் பிரதான செல்வாக்குச் செலுத்துகிறார்கள். ஆசிரியர்கள் மாணவர்களை இதரசெயற்பாட்டில் பங்குகொள்ளச் செய்வதனூடாக இவ்வாறான திறன்களை வளர்க்க உதவ முடியும்.

* வெற்றிபெறுதல், தோல்வி அடைதல் என்பவற்றை சுமுகமாகக் கையாளகற்றுக் கொடுத்தல் வேண்டும். விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமல்லாது ஏனைய போட்டி நிகழ்வுகளான தமிழ்மொழித்தினப் போட்டி, ஆங்கில மொழித் தினப் போட்டி, சமூகவிஞ்ஞானப் போட்டிகள் போன்றவற்றிலும் தாமாக முன்வந்து பங்கு கொள்ளுதல் வெற்றிதோல்விகளைச் சமமாக ஏற்றுக்கொள்ளுதல் போன்றவற்றை வளர்த்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

* சாரணியர் குழு,சுற்றாடல் குழு,பாடசாலையில் காணப்படும் ஏனைய மன்றங்கள் போன்றவற்றின் செயற்பாடுகளில் மாணவர்கள் குழுவாக இணைந்து செயலாற்றவும் தம்மிடையே தலைமைத்துவப் பண்புகளைவளர்த்துக் கொள்ளவும் ஆசிரியர் வழிகாட்டுதல் அவசியமாகும்.

### iii. ஆசிரியர் - மாணவர் ஈடுபாடு

ஆசிரியர் மாணவர் பற்றிய அறிமுக விடயங்களான மாணவர்களின் பெயர், அவர்களது குடும்பப் பின்னணி, வசிப்பிடம், மாணவர்களைத் தொடர்புகொள்ளும் வழிமுறைகள்

போன்றவற்றினைத் தெரிந்திருக்க வேண்டும். பாடத்திற்கு அப்பால் இவ்வாறான விடயங்களை தெரிந்துகொள்ளவேண்டும். இதனூடாக அன்பு, பாசம், பரிவு போன்றவற்றினை ஏற்படுத்த முடியும். மேலும் இதனூடாக சரியான ஆசிரியர் - மாணவ தொடர்பைப் பேணலாம்.

ஆசிரியர் கண்டிப்பானவராகவும் அதே வேளை மாணவர்களுடன் சிநேகபூர்வமாக நடந்து கொள்ளக்கூடியவராகவும் காணப்படும் போது ஆசிரியர் - மாணவர் உறவுசிறப்பாக அமையும். மாணவர்களின் கற்றல் இடர்ப்பாடு தொடர்பாக ஆய்ந்தறிந்து தீர்வைத்தரக் கூடியவராக இருத்தல் வேண்டும். மாணவர்கள் இலகுவில் அணுகக் கூடியவராகவும் தமது இடர்ப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடக் கூடியவராகவும் ஆசிரியர் இருத்தல் வேண்டும்.

**iv. மாணவர்களுக்காக ஆலோசனையும் வழிகாட்டலும்.**

மாணவர்களுக்குஆலோசனையும் வழிகாட்டலும் வழங்குவதற்கு அதற்கெனத் தனியான ஆசிரியர் இல்லாதவிடத்து ஈடுபாடும் அனுபவமும் நிறைந்த எந்தவொரு ஆசிரியராலும் மாணவனுக்கான ஆலோசனையும் வழிகாட்டலையும் வழங்க முடியும்.

கட்டிளமைப் பருவ காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளைக் கையாளக் கூடியவராகவும் அவர்களை வழிநடத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இரகசியத் தன்மையினைப் பேணு வதனூடாக நம்பகத் தன்மையினைப் பேணக் கூடியவராக ஆசிரியர் இருத்தல் அவசியம். மனிதன் ஒருசமூகப் பிராணி என்ற வகையில் சமூகத்தோடு இணைந்துவாழக் கூடியவராக இருக்கவேண்டும். இந்த பாரம்பரிய பொறுப்பில் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு இன்றியமையாதது. எது எவ்வாறு இருப்பினும் ஆசிரியரால் தன்னாலான நுட்பமுறைகளைக் கொண்டு மாணவ ர்களை அறிவாளியாக்குவதற்கு மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் வெற்றியடையச் செய்து சமூகத்தோடு இயைந்துவாழக் கூடிய தன்னிறைவான மாணவர்களைத் தோற்றுவிக்க முடியும். நாளைய நிறைவான சமுதாயத்தை கட்டியெழுப்ப இன்றே சேவையாற்றுவோம்.

# விபத்தில் காயம்



எமது கலாசாலையின் சிரேஸ்ட விரிவுரையாளரும் மாணவர் மன்றக் காப்பாளருமாகிய பொ.சற்குணநாதன் கடந்த 14.10.2020 புதன்கிழமை காலை நீர்வேலியில் உள்ள தனது இல்லத்தில் இருந்து வழமையாகப் பயணிக்கும் யாழ். பருத்தித்துறை வீதி வழியே கலாசாலை நோக்கி வருகை தந்தபோது காலை 8.15 மணியளவில் அதே திசையில் பயணித்த வேகக்கட்டுப்பாட்டை மீறிய பிறிதொரு மோட்டார் சைக்கிளால் மோதுண்டு காலில் காயமடைந்தார். காலில் ஏற்பட்ட என்பு முறிவுக்காக சத்திர சிகிச்சை மேற்கொண்ட அவர் விபத்து லீவில் வீட்டில் உள்ளார். அவர் விரைந்து நலம்பெற பிரார்த்திக்கின்றோம்.

# பரீட்சை விடைத்தாள் திருத்தம்



2018 - 2019 கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களுக்கு தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் பொதுப்பாடப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் அண்மையில் கோப் பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றன. அழகியல் கல்வி, தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், பொதுத்தமிழ், சுகாதாரமும் உடற்கல்வியும், இரண்டாம் மொழி சிங்களம் ஆகிய பாடங்களுக்குரிய பரீட்சைகள் நடைபெற்றிருந்தன.

இவை அந்த அந்தக் கலாசாலை களில் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பெறுபேறுகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. மதிப்பீட்டுப் பணி விரிவுரையாளர்களால் தொண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# 21 ஆம் நூற்றாண்டில் விருத்தி செய்ய வேண்டிய திறன்கள் பற்றிய ஒரு பார்வை

அருளம்பலம் பாலச்சந்திரமூர்த்தி
B.A (Hons) M.Ed, M.A in Geo,
விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை,
விரிவுரையாளர் (கல்விமானிக் கற்கை NIE)
யாழ்ப்பாண மத்திய கல்லூரி நிலையம்



## முன்னுரை

21 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டுவரும் சமூகபொருளாதார மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப மாணவர்களைத் தயார்படுத்துவதற்கு ஏற்ற உலகளாவிய கல்வி ஒன்றுக்கான தேவை பலமாமாக எழுந்துள்ள நிலையில் இதற்கு ஏற்றாற்போல் திறன்களைக்கொண்ட மனிதவளம் ஒன்றினை உருவாக்குவது தொடர்பில் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கல்விப்புலத்தில் உள்ளோர், கொள்கை வகுப்பாளர்கள் சிந்தித்துள்ளனர் இதற்கமைவாக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் நிறுவனங்கள் இவ் நோக்கத்திற்கு ஏற்ற வகையில் பல்வேறு திறன்களை வடிவமைத்து அவற்றினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக 21 ஆம் நூற்றாண்டுக்கான திறனுள்ள மனித வளத்தினை உருவாக்குவதனை நோக்காகக் கொண்டிருக்கின்றது.

## திறன் என்றால் என்ன?

ஒரு செயற்பாட்டில் ஒருவருக்கு இருக்கக்கூடிய திறமை அல்லது ஆற்றல் என்பதனைத் திறனாகக் கொள்ளமுடியும் .

திறன் என்பது இயக்கத் தொழிற்பாட்டின் தொகுப்பு எனவும் கொள்ளப்படுகின்றது. இத் திறன்கள் கல்வி மற்றும் ,பயிற்சி, அனுபவம், ஊடாக அடையப்படுகின்றது.

திறன்களை வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் தமது நோக்கிற்கமைவாக பாகுபடித்தினாலும் பொதுவாக இவை மூன்று பிரதான வகைகளைக் கொண்டுள்ளது

1. வாழ்கைத்திறன்
2. மக்கள் திறன்
3. சமூகத்திறன்கள்

## 21 ஆம் நூற்றாண்டுக்கான திறன்கள்

21 ஆம் நூற்றாண்டில் விரைவாக மாற்றமுறும் டிஜிட்டல் சமுதாயத்தின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப ஆழ்கற்றலுடன் தொடர்புடைய பகுப்பாய்வக் கருத்துக்கள் மற்றும் சிக்கல்களைத் தீர்க்கும் திறன்கள் குழுவாகப் பணியாற்றுதல் போன்ற அறிவுசார்ந்த அடிப்படையிலான தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. இவை பிரதான மூன்று வகைப்பாட்டையும் கொண்டிருக்கின்றது

**1.** கற்றல் மற்றும் கண்டுபிடிப்பு திறன்கள் (இதனுள் பின்வரும் திறன்கள் உள்ளடங்குகின்றது)

*. விமர்சனச் சிந்தனை
*. சிக்கல்களைத் தீர்த்தல்
*. படைப்பாற்றல்கள்
*. கண்டுபிடிப்பு

**2.** டிஜிட்டல் கல்வி அறிவுத் திறன்கள் (இதனுள் பின்வரும் திறன்கள் அடங்கும்)

*.தகவல் எழுத்தறிவு
*.செய்தி ஊடகம்
*.தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

**3.** தொழில் மற்றும் வாழ்கைத் திறன்கள் (இதனுள் பின்வரும் திறன்கள் அடங்கும்)

*.நெகிழ்வுத்தன்மை மற்றும் இணக்கத்தன்மை
*.முன்முயற்ச்சி
*.சமூகக் கல்ச்சாரத் தொடர்பு
*.உற்பத்திதிறன் மற்றும் பொறுப்புக்கள்

## 21 ஆம் நூற்றாண்டுக்கான 4C திறன்கள்

21 ஆம் நூற்றாண்டுக்கான திறன்களில் 4c என்பது முன்னுள்ள ஆழ்ந்த கற்றல் மற்றும் கண்டுபிடிப்பக்கள் எனும் திறனை நன்கு ஆராய்ந்து அதனடிப்படையில் அடையாளம் கண்ட திறன்களாகப் பின்வரும் நான்கு C திறன்கள் முன்வைக்கப்பட்டுள்ளது

*.குழுவாகப் பணியாற்றுவதும் இணைப்பாக்கமும் (Collaboration)
*. தொடர்பாடல் திறன்கள் (Communication)
*. விமர்சனச் சிந்தனைகள் (Critical thinking)
*. படைப்பாற்றல்கள் (Critical thinking)

## எதிர்கால உலகிற்கேற்ப இலங்கையின் ஆசிரியர்களுக்கான திறன் பயிற்சிகள்

இலங்கையின் கல்வி அமைச்சினால் கல்வித்துறைசார் ஆளணியினரின் பயிற்சியும் அபிவிருத்திக்காக வடிவமைக்கப்பட்ட (Ministry of Education TRAINING AND DEVELOPMENT PLAN 2017-2018) திட்டத்தின்படி நாளைய சிறார்களின் உலகத் திறனுக்கான கல்விக்குரிய வகையில் 21 ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியர்களுக்கான திறன்களை இனங்கண்டுள்ளது. திறன் குறிக் கோள்களை முன்னேற்றுவதற்காக Hanover என்பவரினால் 06 பிரதான கல்விச் சட்டகங் களைக் கொண்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் 21 ஆம் நூற்றாண்டுக்கான திறன் தொடர்பில் பின்வரும் நிறுவனங்களுடனும் தொடர் புபட்டுள்ளது Partnership for 21st Century Skills, Tony Wagner's Seven Survival Skills, the Metiri Group's enGauge framework, the Iowa Core 21st Century Skills மேற்குறித்த கல்விச் சட்டகங்களில் The Iowa இன் திறன்களை மையப்படுத்தி 21 ஆம் நூற்றாண்டுக்கான 4 விமர்சனத் திறன்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இலங்கையின் கல்வி அமைச்சு கல்வித் துறை சார்ந்த ஆசிரியர்களுக்கு 21 ஆம் நூற்றாண்டுக் கான திறன்களாக பின்வரும் நான்கு திறன்களை இனங்கண்டு அதற்கான பயிற்சிகளை வழங்கவ தற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.


*. Collaboration and teamwork (இணைதலும் குழுவாக வேலை செய்தலும்)

*. Creativity and imagination (உருவாக்கமும் கண்டுபிடிப்புக்களும்)

*. Critical thinking (விமர்சனச் சிந்தனைகள்)

*. Problem solving (பிரச்சனை தீர்த்தல்)

வெற்றிகரமான ஆசிரியர் ஒருவரின் பண்புக் கூறான திறன்களாக பின்வருவன காணப்படு கின்றது.




## தொழில்சார் திறன்கள்

ஆசிரியர் ஒருவர் விருத்தி செய்யவேண்டிய தொழில்சார் திறன்களாகப் பின்வருவன காணப் படுகின்றது

*. கற்றலுக்குரிய நிகழ்ச்சித் திட்டத்தினை உரு வாக்கிக் கொள்ளல்.

*. தன்னிடம் கற்கும் மாணவர்களை இனங் கண்டு கொள்ளுதல்.

*. பொருத்தமான கற்றல் சூழ்நிலையை உரு வாக்கிக் கொள்ளல்.

*. மகிழ்சிகரமாக கற்றல் கற்பித்தலை உருவாக் கிக் கொள்ளுதல்.

*. மாணவர்களைப் பல்வேறு வழிகளிலும் ஊக் கப்படுத்துதல்.

*. கற்பித்தல் உபகரணங்களைச் உருவாக்கு வதும் அவற்றினைச் சரியாகப் பயன்படுத்துவதும்.

*. விசேடதேவையுடைய மாணவர்களை விசேட முறைகளைப் பயன்படுத்தி இனங்காணுதல்

*. வெளிவாரியாகக் கற்றல் வாய்ப்புக்களை உரு வாக்குதல்

*. கணிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகளை வளப் படுத்தலும் அவற்றினை மீளூட்டலும்.

*. சுயமதிப்பீடு மற்றும் ஆய்வுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுதல்.

## முகாமைத்துவத் திறன்கள்

*. வகுப்பறையை ஒழுங்கமைத்துக் கொள்ளல்

*. வளங்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் பயன்படுத்துவதும் பாதுகாப்பதும்

*. வகுப்பறை ஒழுக்கத்தினைப் பேணுதல்

*. பாடசாலைத் திட்டமிடலுக்கு உதவுதல்

*. நேர முகாமைத்துவத்தைப் பின்பற்றுதல்

*. வினைத்திறனான வளம்பாவனையை உறுதி செய்தல்

*. பாடசாலைப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங் களை உருவாக்குதல்.

*. கூட்டங்களை ஒழுங்கமைத்தலும் முன்னெடுத் தலும்.

## சமூகத்திறன்கள்

*. மானவர்களுடன் இடைத்தொடர்பு கொள்ளுதல்.

*. ஏனைய ஆசிரியர்களுடன் இடைத் தொடர்ப கொள்ளுதல்.

*. ஆட்சியாளர்களுடனான சமூக உறவு.

*. பெற்றோர் மற்றும் வேறு குழுக்களுடனான தொடர்புகள்.

*. கல்வியுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடனான தொடர்பகள்

*. சர்வதேச சங்கங்கள் ஊடாக பூகோளத் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

### முடிவுரை

இன்றைய கல்வி உலகில் உள்ள கற்போர்கள் தாம் 21 ஆம் நூற்றாண்டில் அடையவேண்டிய திறன்கள் எவை என்பதனை அறிவதுடன் அதே போன்று கற்பிப்போன் மாணவர்களுக்கு எவ்வாறான திறன்களைக் கற்பிக்கவேண்டும் என்பதனை அறிந்திருப்பதுடன் அதற்கேற்ப தம்மை மாற்றிக்கொள்வதன் மூலம் எதிர்கால அறிவு சார்ந்த, தொழில் உலகிலும் தம்மை வெற்றிகரமாக ஈடுபடுத்த வாய்ப்பாக அமையும் என்பதனால் மேற்குறித்த திறன் பற்றிய பார்வை தற்காலத்தில் முக்கியம் பெறுகின்றது.

# கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற நவராத்திரி வழிபாடுகள்




கலாசாலையின் நவராத்திரி பூஜை வழிபாடுகள் இவ்வாண்டும் பக்திமயமாக இடம்பெற்றன. கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேசுவரர் ஆலயத்தில் இருபாலை கற்பகவிநாயகர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ வி.செல்வசேனக் குருக்களால் விரத நாள்களில் பூசை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்துமன்றக் காப்பாளர் திருமதி ஜானகி தர்மஜீலனின் வழிப்படுத்தலில் கலாசாலையின் நெறிகளைச் சார்ந்த மாணவர்கள் ஒழுங்கு முறையாகப் பூஜைகளைப் பொறுப்பேற்று மேற்கொண்டனர். இந்துமன்றத் தலைவர் வி.கவிச்செல்வம், செயலாளர் வ.துசியந்தன், பொருளாளர் ந.ரஜீவன், சிரேஸ்ட மாணவ முதல்வர், சிரேஸ்ட மாணவ முதல்வி மற்றும் இந்துமன்றம், மாணவர் மன்றம் சார்ந்த உறுப்பினர்கள் நாள்தோறும் நடைபெற்ற பூசைகளில் பங்குகொண்டனர்.

கொவிட் 19 தொற்று நிலைமை தீவிரமடையும் சூழலில் மாணவர் பங்கேற்பு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் கலாசாலை தொற்று சந்தேகநபர்களுக்கான தனிமைப்படுத்தல் மையமாக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. இந்நிலையில் பூசைகள் தடங்கலின்றி நடைபெறுமா என்ற அச்ச நிலையில் இறை கருணையுடன் பூஜை வழிபாடுகள் சிறப்புற முன்னெடுக்கப்பட்டன. ஒவ்வொருநாள் பூசையின் போதும் விரிவுரையாளர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

விஜயதசமி நாளன்று மானம்பு (வாழை வெட்டு) உற்சவம் இடம்பெற்றதுடன் வித்தியாரம்ப நிகழ்வும் நடைபெற்றது. கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன், இந்துமன்றக் காப்பாளர் ஜானகி அம்மாள் தர்மசீலன் ஆகியோர் மழலைகளுக்கு ஏடு தொடக்கிவைத்தனர். இருபது மழலைகள் ஏடு தொடக்கல் நிகழ்வில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை தனிமைப்படுத்தல் மையமாகுமா...?



# கலாசாலைக் கீதம் தந்த பண்டிதர் நல்லூர் சு.இராசையா


"யாழ். நகர் மீதமர் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை வாழ்க...
அறிவொளி பெருக்கியே வாழ்க... ஆசிரிய மாணவர் வாழ்க..."
தினம் தினம் கலாசாலையில் ஒலித்துக் கொண்டிருக்கும் இந்த வாழ்த்து வரிகளுக்கச் சொந்தக்காரர் அமரர் பண்டிதர் நல்லூர் சு.இராசையா.

செல்லையா என்ற (இராசையா) அவர்கள் 06.11.1912 புதன்கிழமை இரவு 7.00 மணியளவில் அப்பூவுலகில் பிறந்தார். தனது வீட்டிற்கு அருகாமையில் உள்ள கத்தோலிக்கப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரையில் படித்தார். வறுமையின் காரணமாகப் படிக்கும்போது சுருட்டுச் சுற்றும் தொழிலில் ஈடுபட்டார். என அவரது நினைவுமலரில் ஒரு குறிப்பு உள்ளது. அவரது மனப்பாடம் செய்யும் திறனையும், கல்வியில் கொண்ட ஆர்வத்தையும் கண்ட அவரது தகப்பனார், அவரைக் கோப்பாய் சாதனா பாடசாலையில் சேர்த்து மேல்வகுப்புப் படிக்க வழி வகுத்தார். மிகுந்த கஷ்டத்துள்ளும் கல்வி கற்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டமையால் இவர் பெற்ற பரிசுப் புத்தகங்கள் பல.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் இரு வருடங்கள் ஆசிரிய பயிற்சி பெற்று, தனது 19 ஆவது வயதில் (16.09.1932) ஆசிரியப் பதவிபெற்றார். அந்தக் காலகட்டத்தில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையை ஆசானாகக் கொண்டு, மதுரைத் தமிழ்ப் பண்டிதர் பரீட்சையில் 13.07.1937 இல், தனது 25 ஆம் வயதில், சித்தியடைந்தார். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியராக இருந்த வித்துவ சிரோன்மணி சீதாராம சாஸ்திரியாரிடம் சமஸ்கிருதத்தை ஒரு பாடமாகக் கற்று பண்டிதர் பரீட்சையில் தேர்ச்சி பெற்று தனது சமூகத்திற்கு பெருமை சேர்த்தார்.



அ.யுஸ்ரின் அஞ்சலா
தமிழ்ச் சிறப்புநெறி
ஆசிரிய மாணவி
மன்னார்



தனது ஆசியப் பணியை செவ்வனவே ஆற்றி 01.10.1949 இல் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பதவி பெற்று, இலங்கையின் கீழ் மாகாணத்திலுள்ள அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஒருவருட காலம் கடமையாற்றினர். பின்னர், கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு மாற்றலாகி வந்து (அப்போது எமது ஆசிரிய கலாசாலை இப்பெயராலேயே அழைக்கப்பட்டது.) பதின்மூன்று வருடங்கள் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். 1963 இல் கொழும்புத்துறை அரசினர் ஆசிரியர் கலாசாலைக்கு மாற்றம் பெற்று ஐந்து வருடங்கள் அங்கு கடமையாற்றினார்.

அந்நியராட்சியின் போது கிறிஸ்தவ மிஷனரியினரே கல்வியின் ஏகபோக உரிமையைப் பெற்றதுடன் மிஷனரிப் பாடசாலையில் பைபிள் படித்த பின்னரே பாடம் புகட்டும் முறையையும் பின்பற்றியிருந்தனர். இதனால் சைவப் பிள்ளைகள் கிறீஸ்தவப் பாடத்தைக் கற்கும் நிர்ப்பந்தம் உண்டானது. எனவே இவற்றிற்கு முற்றுப்

புள்ளி வைக்கும் முகமாக அறிவுச் சமூகத்தை கூட்டி சிறு அரசியல் தலையீட்டையும் பெற்று திருநெல்வேலியில் உள்ள செங்குந்த இந்துக் கல்லூரியை இரு மொழிப்பாடசாலையாக மாற்றிய பெருமை பண்டிதரையும் சாரும்.

இலக்கண சுத்தியுடன் பாட்டுகளை எழுதும் வல்லமை பெற்ற பண்டிதர் அவர்கள், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை, கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றிற்குரிய கலாசாலைக் கீதங்களை ஆக்கிய பெருமைகளைப் பெற்றார்.

எமது காலாசாலைக்கு ஆக்கிய கலாசாலைக் கீதத்தை பண்டிதரின் உணர்வோடு அவதானிக்கையில்...

"யாழ்நகர் மீதமர் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை வாழ்க,
அறிவொளி பெருக்கியே வாழ்க" ஆசிரிய மாணவர் வாழ்க,
அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் வாண்மையை அறிவோம்."

என்ற வரிகளைதான் ஆக்கும்போது நிறைந்த ஆசீர்வாதத்துடன் எழுதியிருப்பார் என்றே தோன்றுகின்றது. ஏனெனில் காலாசாலைக்கு அடியெடுத்து வைத்த நாள் முதல் எமது அறிவு விரிவுரையாளர்களினால் புடமிடப்பட்டு, அவர்களது கல்வி அநுபவங்களுடாகப் பன்மடங்கு பெருகியதோடு, அழகியற் கலைகளில் ஆசிரியர் மாணவர்களுக்கு நிகர் யாருமில்லை எனலாம். கலையார்வம் இல்லாதுவரும் கலையற்றவனைக் கூட கலைக்கூத்தாட வைத்த பெருமை எம் கலாசாலையையே சாரும். அதற்கு பண்டிதர் தந்த ஆசீர்வாதம் முதன்மையானது என்று கூறுவதில் எவ்வித ஐயமுமில்லை.

அறந்தமிழ் அகநூல் அறிவுறு கணிதம் ஆவன
நிறைந்திடப் பயில்வோம்.
தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியில் காப்போம் எம் மானம்.
எண்டிசை புகழ எம் கலாசாலை வாழ
இயன்ற நற்பணிகளைப் புரிவோம்.

பண்டிதர் தீர்க்கதரிசியோ என்று எண்ணத் தோன்றுகிறது. யாழ். மண்ணில் தமிழுக்குப் பஞ்சமில்லை, அதேபோன்று தமிழ்ப் பண்டிதர்களைக் கொண்டமைந்தது எம் கலாசாலை. நாட்டின் ஆசிரியர் கலாசாலைகளில் எமது கலாசாலையிலேயே கணிதப் பிரிவு சிறப்பாக நடைபெற்று திறமையுள்ள ஆசிரிய மாணவர்களை பாடசாலைக்குத் தருகிறது என்ற பெருமையும் எம் கலாசாலைக்கு உண்டு. இதற்கு இங்கிருந்து சென்ற ஆசிரியமாணவர்களே சிறந்த சாட்சி. பண்டிதர் அவர்கள் எமது கலாசாலையில் பல வருடம் பணியாற்றியதாலோ என்னவோ இன்னும் எமக்கு ஆசீரை பொழிந்துகொண்டிருக்கிறார். அன்று எழுதிய வார்த்தைகள் இன்றும் நடந்தேறிய வண்ணம் உள்ளது.

அரசினர் ஆசிரியர் ஆற்றுநல் உதவி
அகிலத்தில் என்றென்றும் மறவோம்
அதிபரும் ஏனைய ஆசிரியகுழாமும்
ஆண்டவனால் என்றும் வாழ்க

இப்பாடலடிகளை கேட்கும்போது பண்டிதர் அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது.

*1967* ஆம் ஆண்டில் பண்டிதர் நோயினால் தனது ஆசிரியத்துவத்திலிருந்து இளைப்பாறிய போது பண்டிதமணி. சி.கணபதிப்பிள்ளை அவர்கள் இளைப்பாற்று விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தமை பண்டிதரிடம் அவரது ஆசிரியர்கள் கொண்ட அன்பையும், பண்டிதரின் குருபக்தியின் ஆழத்தையும் காட்டியது. இவ்வேளையில் பண்டிதமணி அவர்கள் பண்டிதரை பின்வருமாறு வாழ்த்தி உள்ளார்.

"செந்தமிழில் வல்லதிரு நிறைந்த பண்டித நீ
கந்தவேளின் கருணையினால் - சிந்தை நிறை
செந்திருநேரும் மனைவி செல்வமாம் மக்களுடன்
சந்ததமும் வாழி தழைத்து."

இவ்வரிகளை பண்டிதர் தன் ஆசான்களையும் தனது மாணவர்களையும் என்றும் மறந்ததே இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. எமக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் ஆசிக்கு ஈடேதுமில்லை. அவர்களின் ஆசியே எம் உயர்வுக்கான படிக்கல். எமது கலாசாலைக் கீதத்தின் கடைசி இருவரிகளுமே இதற்குச் சான்று. இவையெல்லாம் தன் வாழ்வில் காண்பேன் என்ற உறுதியே இவ்வரிகளை கடைசிவரிகளாகத்தர காரணமோ!

ஒவ்வொரு நாளும் நாம் பாடிச்செல்லும் எம் கலாசாலைக் கீதம் உணர்வு பூர்வமான ஆத்மார்த்தமான ஒரு செயலைத் தூண்டும் கீதம் என்றால் மிகைப்படாது. கலாசாலையின் கீதத்தை உணர்ந்து பாடுவோம். வெறுமனே உதடுகளோடு மட்டும் நின்றுவிடாது உள்ளத்திற்கும் எடுத்துச் செல்வோம். கலாசாலைக் கீதத்தின் மகத்துவம் அறிவோம்.

# பிரியா(த)விடை பெற்றார்
# சிவசக்தி ராதாகிருஷ்ணன் அம்மையார்!



திருநிறைந்த வதனம், மங்கல வடிவினர், தோற்றத்தில் மட்டுமன்றி நாமத்தாலும்..! கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் துணை அதிபர் திருமதி சிவசக்தி இராதாகிருஷ்ணன் அகவை அறுபது காண்டுள்ளார். புறத்தோற்றத்தால் மட்டும் விடைபெற்றுள்ளார், உள்ளத்தால் பிரியாத உயர்வுடைய எங்கள் துணை அதிபர்!

திரு திருமதி. இரத்தின சிங்கம் - கங்காதேவி தம்பதியினரின் முதல் மகவாக 1960.10.25 இல் பிறந்தார். சிவசங்கர் என்ற ஓர் அருமைத் தம்பி இவரது ஒரே உடன்பிறப்பு. ஆரம்பக் கல்வியை மூன்றாம் ஆண்டுவரை யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் பெற்றார். தந்தையார் திரு. இரத்தினசிங்கம் அனுராதபுரம் விவேகானந்த மகாவித்தியாலயத்தில் அதிபராகவிருந்தார். இதனால் அநுராதபுரத்திலேயே ஆரம்பக்கல்வியின் தொடர்ச்சியும், இடைநிலைக் கல்வியும் அமையப் பெற்றார். க.பொ.த உயர்தரத்தின் பின்னர் 1983 இனக்கலவரப் பிரச்சினையால் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து வாழ்க்கைப் பயணம் தொடர்ந்தது. இதற்கிடையில் கொழும்பில் Alpha Computer நிறுவனத்தின் Ceylon Printer இல் தொழில்நுட்பத்துறையில் பணிபுரிந்த அனுபவத் தேட்டமும்!

யாழ்ப்பாணம் வந்தமர்ந்ததும் 1990 இல் யா/நல்லூர் இந்துத் தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் (மங்கையர்க்கரசி ம.வி.) உடற்கல்வி ஆசிரியராக நியமனம் கிடைத்து அரச பணியில் இணைந்தார். இங்கு பணிபுரிந்து 4 வருட நிறைவில் யா/திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தது. அங்கு நல்லாசிரியராகப் பணிபுரிந்து வந்த காலத்தில் - 1994 இல் திருமண பந்தத்தில் இணைந்தார். யாழ். வண்ணார் பண்ணை - நீராவியடியைச் சேர்ந்த திரு.திருமதி கந்தசாமி தம்பதியினரின் மகன் "இலங்கை வேந்தன்" புகழ் இராதாகிருஷ்ணன் அவர்களைத் திருமணம் புரிந்து 1995 இல் தமிழினி என்ற பெண் மகவைப் பெற்று மங்கல மனைமாட்சி கண்டார். 1999இல் பலாலி ஆசிரியர் கலாசாலையில் உடற்கல்வி விரிவுரையாளராக இணைந்தார். அங்கு பணிபுரியும் காலத்தில் - 2000 ஆம் ஆண்டு இலங்கைக் கல்வி நிர்வாக சேவை (SLEAS) உயர்வு பெற்று விரிவுரையாளர் பணி தொடர்ந்தார். 2012 ஆம் ஆண்டு பலாலி ஆசிரியர் கலாசாலையின் உத்தியோகத்தர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு மாற்றலாக்கப்பட்டபோது சிவசக்தி அம்மையாரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு மாற்றம் பெற்று வந்தார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கல்விச் செயற்பாடுகளில் துணைநின்ற காலத்தில் - 2014 இல் தமை நாடிவந்த துணை அதிபர் பதவியை ஏற்று கலாசாலை நலன்களில் சீரிய பங்காற்றி, கலாசாலையின் வளர்ச்சிகளை அலங்கரித்து, இன்று 24.10.2020 இல் எங்கள் அன்புள்ளத்தால் பிரியாமலும், ஒன்றாகக் கூடிக்குலாவி மகிழும் தருணங்களால் மட்டும் பிரிந்தும், விடைபெற்றுள்ளார் அம்மையார்!


**கு.பாலசண்முகன்**
**விரிவுரையாளர்**
**கோப்பாய் ஆசிரிய**
**கலாசாலை**




பிள்ளைக்குப் பெயர் சூட்டும்போது ஏதாவதொரு கடவுளின் பெயர் வாராதா என்று பலரும் ஏங்குவர். ஆனால் அம்மையாரின் முழுப்பெயர் இருஜோடிதெய்வ இணைப்புக்களின் திருநாமங்கள்! 'சிவ - சக்தி' 'இராதா - கிருஷ்ணன்'! இப்பெயர் போலவே அம்மையாரின் பண்பு நலன்களும்! சமூகப் பணியிலும் சளைக்காத தகவுடையார். திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கம் அம்மையாரின் சமூகப் பணிகளின் உன்னதத்தை உலகுக்குரைக்கும்! அகழ்வாரையும்

தொடர்ச்சி பக்-13

**பிரியா(த) விடை...**

தாங்கும் பொறுமை, எதையும் தாங்கும் இதயம், விருந்தளிப்பது, உதவி செய்வது அம்மையாரின் அன்புமிகுந்த உயர்குணங்கள்! விடயங்களை நேருக்கு நேரே பண்புடன் பகர்தல், நேர்ப்பாங்கான மென்திறன்கள் என நற்குணங்கள் பலவும் பொருந்திய சிரேஷ்ட விரிவுரையாளர்! எங்கள் துணையதிபர் திருமதி சிவகச்தி இராதா கிருஷ்ணன் அவர்களது சகல பணிகளுக்கும் உதவி ஒத்தாசைகளுக்கும் என்றும் எம் நன்றிகள்! அயராதுழைத்த உயர்வுடைய அம்மையாரின் ஓய்வுகாலமும் முயற்சியுடனும் வினையாற்றலுடனும் கடந்து செல்லும் என்பதைஅவரை அறிந்த யாவரும் அறிவர். எந்நாளும் எந்நாளும் இன்பமுடன், எழிலார்ந்த வதனமுடன் அன்புமிக குடும்பத்தாரோடு சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்!வாழ்க வளமுடன்!

# ஆசிரியத்துவம்

அன்பும் அரவணைப்பும் இனிதே நிரம்பிய
அறிவு ஊற்றாம் நல் ஆசிரியத்துவம்
அறிவை, ஆற்றலை அணிசேர் திறமைகளாய்
அறியவைக்கும் சிறந்த ஆசிரியத்துவம்

தொழில் என்று கூறின் தோற்றுப் போகும்
தொடர்ந்தே வழங்கும் சேவையாய்
தொன்றுதொட்டு மிளிரும்
புனித வாழ்வின் அத்திவாரம் ஆசிரியத்துவம்

நிலையில்லா இவ்வுலகில்
நிதர்சனமான வாண்மைத்துவத்தோடு
நிகரின்றி சுடர்விடும் தீபமாம்
நித்திலமான ஆசிரியத்துவம்

எண்ணற்ற சுமைகளை சுமந்து வந்தாலும்
எள்ளளவும் எண்ணிவருந்தாது
எட்டித்தள்ளி உதைத்தே
ஏணியாய் சிகரம் தொடும் ஆசிரியத்துவம்

வரையறையற்ற தொழிலாளர்களை
வாஞ்சையோடு உருவாக்கித் தந்திடும்
வண்ணமயமானஆசிரியர் குழாம்
வாழிய நீவீர் பல்லாண்டு...



ஆக்கம்:
செல்வி ராதிகா சிவபாலசிங்கம்
(ஆசிரிய மாணவி)
ஆரம்பக்கல்வி–1
(2019/2020)

# அன்னைக்கு ஓர் மடல்

உயிரெல்லாம் உருவாக்கம்
இறைவனின் படைப்பில்
ஆனால்
உறவொன்று பரிணாமம்
உன் உடலில்

ஐயிருமாதங்கள் வலிதனைப் பாராது
கருவினில் எனைத் தாங்கி
நீகண்டகனவுகள்
சின்னாபின்னமானது

நான் வந்து பிறந்ததும்
என் செய்வேன் அன்னையே
உன் கருவறையும் கறுப்பல்லவா

உன்னையும் என்னையும் வைத்து
ஓர் நிறயுத்தமே நடந்தது
நம் வீட்டில் அதில்
வெற்றிபெற்றவள் நீதான்
தாய் சேய் யுத்தத்தில் வெற்றி என்றும்
தாய்மைக்கே என்பதை எடுத்துக்காட்டினாய்
உன் பாசஉணர்வால்

அழகற்ற என்னை
அனைவரும் வெறுத்தபோது
அன்புடன் அரவணைத்து
அகத்தினில் அழகைக் கண்டாய்

அழகிற்கும் அறிவிற்கும்
சம்பந்தமில்லாத என்னை
தினம் தினம் இயற்கைக்கு
அறிமுகம் செய்துவைத்தாய்
இயற்கையும் சிரித்தது ஒரு
கருப்பு நிலவை உன் கையில் கண்டு

என்னால்தான் உனக்கு
எத்தனை துன்பங்கள்
அத்தனையும் தாங்கினாய் இத்தனை
நாள் வரையில்
இன்னுமொரு ஜென்மம் இருந்திட்டால்
அதிலும் நான் வந்துபிறக்க வேண்டும்
உன் கருவில்.



**பாசமுடன் மகன்**
**கரவை.செ.றமேஷ்.**
**ஆரம்பக் கல்வி 2**

# அப்துல் கலாமின் பார்வையில் ஆசிரியர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்



த. கோபாலகிருஷ்ணன்
(SLTES III)
உப அதிபர்,
கோப்பாய் ஆசிரியர்
கலாசாலை.

இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், மிகப்பெரிய பொருளாளர், இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை மற்றும், அனைவராலும் மதிக்கத்தக்க அற்புதமான பேச்சாளர், வருங்கால இளைஞர்களின் முன்மாதிரியாக திகழ்ந்த மகான், எனபல்வேறு பணிப்பங்குகளில் சமூகத்துக்கும் நாட்டுக்கும் அரும்பணியாற்றிய மாமனிதரே அப்துல்கலாம் ஆவார்.

1931 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் ஜைனுலாப்தீனுக்கும் ஆஷியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் பாம்பன் தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் பிறந்தார். சென்னை எம்.ஐ.டி கல்லூரியில் முதுகலைப் பட்டத்தைப் பெற்ற இவர் விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கி ஹெலிகொப்பர் உருவாக்கம், செயற்கைக்கோள், ஏவுதல் ஆகியவற்றுக்கும் மூலகர்த்தாவாக விளங்கினார். இச்சாதனைகளுக்காக இந்தியாவின் மிகப்பெரிய விருதுகளான பத்மபூஷன் விருது, பாரதரத்னா விருது ஆகியவற்றைப் பெற்றதுடன் இந்தியாவின் ஜனாதிபதியாகவும் விளங்கினார்.

இத்தகைய பெரும்புகழ் சாதனைகள் செய்து சிறந்த விஞ்ஞானியாகத் திகழ்ந்த இவர் சிறந்த ஓர் ஆசிரியராகவும், கல்வியியலாளராகவும் விளங்கினார். இறுதி நேரத்தில் மாணவர்களுக்கு ஆசிரியராக கற்பித்துக்கொண்டே இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இன்றைய உலகுக்கு வேண்டிய பல்வேறு கல்விச் சிந்தனைகளை வழங்கிய இவர், ஓர் ஆசிரியருக்கு இருக்கவேண்டிய ஒன்பது பண்புகளையும் குறிப்பிட்டிருந்தார்.

இன்று ஆசிரியர்தின விழாவினை எமது கலாசாலை கொண்டாடுகின்ற இன்றைய நாளில் எனது ஆசிரியர் தின உரையாக அப்துல்கலாம் குறிப்பிடுகின்ற ஆசிரியர் பற்றிய சில கருத்துக்களை நோக்குவோம்.

*. ஆசிரியர்கள் இல்லாத உலகு ஆணிவேர் அற்ற ஆலமரத்தைப் போல எப்போது சாய்ந்து விழும் என யாருக்கும் தெரியாது.

*. ஒருவரது வாழ்வில் அவருக்குள் அதிகமான நேர்மறை எண்ணங்களை ஒருவர் விதைத்திருக்கின்றார். எனில் அது ஆசிரியாரைத் தவிர வேறு யாராகவும் இருக்கமுடியாது. இந்த நேர்மறை எண்ணம் தான் ஆசிரியர் மீது ஈர்ப்பை ஏற்படுத்துகின்றது.

*. முதலில் வாழ்க்கையில் ஏற்படும் சறுக்கலின் போது தோள்தூக்கி விடுவதற்கு பெரியவர்கள் வீட்டில் இருந்தனர். இப்போது அவ்விடத்தை நிரப்புபவர்கள் ஆசான்கள்.

இவ்வாறு ஆசிரியர்கள் பற்றிக் குறிப்பிட்ட அப்துல்கலாம் அவர்கள், ஆசிரியர் ஒருவருக்கு இருக்கவேண்டிய பின்வரும் ஒன்பது பண்புகளைக் குறிப்பிடுகின்றார்.

### 01. நேர்மறை எண்ணங்களை விதைப்பவர்.

சிலர் கடவுளின் பால் நேர்மறை ஈர்ப்புக் கொண்டிருப்பார்கள் எனவே தங்களது கஷ்டம், இன்பம் என அனைத்தையும் கோவிலுக்குச் சென்று பகிர்ந்துகொள்வார்கள். சிலர் நண்பர்கள் பால் நேர்மறை ஈர்ப்புகொண்டிருப்பார்கள். ஆனால் மாணவ வயதில் பெரிதாக நேர்மறை ஈர்ப்பு ஏற்படுவது ஆசிரியருடன் தான் என்கின்றார்.



**02. அறிவாற்றல் மிகுந்தவர்**

பெரும்பாலும் ஆசிரியர் மீது நேர்மறை ஈர்ப்பு ஏற்படுவதற்கு காரணம், அவர்களது ஆழமான அறிவாற்றல் தான் என குறிப்பிடுகின்றார். ஒரு சூழலைக் கடந்துவர அவர்கள் கூறும் வழிகள் முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்சென்று ஒரு நற்பாதையாக அமைவதற்கு ஆசிரியர்களின் அறிவாற்றல்கள் மாணவனுக்கு உறுதுணையாக அமைகின்றன.

**03. தீர்வு வழங்குபவர்**

முதலில் வாழ்க்கையில் ஏற்படும் சறுக்கலின் போது தோள்தூக்கிவிட பெரியவர்கள் வீட்டில் இருந்தனர். இப்போது அந்தச் சூழல் குறைவடைந்து இவ்விடத்தை ஆசிரியர்களே நிரப்புகின்றனர்.

**04. நம்பிக்கை ஏற்படுத்துபவர்**

இன்றைய உலகில் மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளுடன் பாடசாலைக்கு வருகின்றனர். பிரச்சினையால் அல்லற்பட்டு வழி தெரியாது மாணவன் இடர்படுகின்றபோது அவனுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி, அவனை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் ஓர் ஏணியாக ஆசிரியர் விளங்குகின்றார்.

**05. இரகசியம் காப்பவர்**

நண்பன், காதலி, அம்மா, அப்பா, சகோதரன் எனயாரிடம் கூறும் இரகசியங்களும் வெளிவரும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால் தன் தனிப்பட்ட பிரச்சினையைப் பற்றி மாணவன் ஆசிரியரிடம் கூறுகின்றபோது அது இரகசியம் காக்கப்படும். அந்தளவுக்கு ஆசிரியர் இரகசியம் காப்பவராக விளங்குகின்றார் எனகலாம் குறிப்பிடுகின்றார்.

**06. வழிகாட்டி**

ஆசிரியரைத் தவிர ஒரு சிறந்த வழிகாட்டி இவ்வுலகில் இல்லை. தன் ஆசைகளைத் திணிக்கும் பெற்றோர்களைவிட அவனுள் இருக்கும் ஆசைக்கும் கனவுகளுக்கும் சிறகுகளைப் பரிசளித்து வானில் உயரப் பறக்க உதவும் ஆசிரியர்கள் என்றும் சிறந்தவர்கள் என அப்துல்கலாம் குறிப்பிடுகிறார்.

**07. வானம் போல் இருப்பவர்.**

மாணவர்கள் எத்தனை உயரப் பறந்தாலும் அவர்களுக்கு வானமாய் இருப்பது அவர்களது ஆசிரியர்கள் தான். பள்ளினும் கூண்டுக்குள் அடைபட்டுதன் குஞ்சுகளை வானில் பறக்கவைத்து மகிழும் ஒரேஜீவன் ஆசிரியர்கள் தான் குறிப்பிடுகின்றார்.

**08. முன்மாதிரியானவர்**

பெரும்பாலும் நாம் கண்ட, காணும் மேதைகளின் முன்மாதிரிகள் அவர்களது ஆசிரியர்கள் தான். மாணவர்களுக்குள் ஒவ்வொருவரும் சிறந்தவன் என்ற எண்ணத்தை விதைத்து, வெற்றி என்பது எட்டிப் பிடிக்கும் தூரம் என்பதனைக் கற்றுக்கொடுத்து முன்மாதிரியாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள்.

**09. வெற்றி இடமாக மாற்றுபவர்கள்**

வெற்றிடமாக இருந்த பிரபஞ்சத்தை வெற்றி இடமாக மாற்றுபவர்கள் ஆசிரியர்கள். என அப்துல்கலாம் குறிப்பிடுகின்றார்.

இந்த வகையில் விமானத்தினையும் ஏவுகணைகளையும் அணுகுண்டினையும் தயாரித்து வழங்கி, இந்தியாவை ஓர் வல்லரசாகத் தலை நிமிரச் செய்தவர் அப்துல்கலாம் ஆவார். இவர் ஒரு புகழ் பூத்த விஞ்ஞானியாக மட்டுமன்றி, சிறந்த ஓர் ஆசிரியராகவும், கல்விச் சிந்தனையாளராகவும் விளங்கினார். அவர் ஆசிரியர் பற்றிக் குறிப்பிட்ட மேற்போன்ற சிந்தனைகளும் ஆசிரியரிடம் இருக்கவேண்டிய பண்புகள் பற்றிய கருத்துக்களும் அவர் மறைந்தாலும் இன்றும் எக்காலத்துக்கும் மிகவும் பொருந்தக் கூடியன. என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

## துயர் பகிர்வு



### அமரர் பத்மாவதி பாலசுப்பிரமணியம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் உடற்கல்வித்துறை விரிவுரையாளர் திரு பா.பாஸ்கரன் அவர்களின் அன்புத் தாயார் பத்மாவதி பாலசுப்பிரமணியம் 02.10.2020 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். இறக்கும் போது அவருக்கு வயது 75. சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் புலம்பெயர்ந்து பிள்ளைகளுடன் அவுஸ்திரேலியாவில் வசித்து வந்தார். அவரது இறுதிக் கிரியைகள் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்றன.

துயர்பகிர்வதற்காக கலாசாலைச் சமூகத்தவர்கள் உரும்பிராயில் உள்ள விரிவுரையாளர் திரு. பா. பாஸ்கரன் இல்லத்திற்குச் சென்று ஆறுதல் பகன்றனர். அன்னாரில் பிரிவால் துயருற்றிருக்கும் விரிவுரையாளர் திரு பா.பாஸ்கரன் குடும்பத்தினருக்கு கலாதீபத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

# யாழ்.கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பெறுபேறுகளின் நிலைமைப் பகுப்பாய்வு - 2019



சத்தியா ரஞ்சித்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர்
கலாசாலை.

**01. அறிமுகம்**

இலங்கையில் தற்போது இயங்கு நிலையில் உள்ள எட்டு ஆசிரிய கலாசாலைகளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் ஒன்றாகும். இங்கு 2019 ஆம் ஆண்டு 227 மாணவர்கள் பின்வரும் கற்கை நெறிகளில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்கள் 2017 - 2018 கல்வியாண்டுக் குரியவர்கள் ஆவர்.

***. ஆரம்பக் கல்வி**

- *. இந்துசமயம்
- *. மனைப்பொருளியல்
- *. சங்கீதம்
- *. விவசாயம்
- *. வர்த்தகக்கல்வி
- *. விசேடகல்வி
- *. கணிதம்

**02. நெறி சார்ந்த பரீட்சைகள்**

**2.1. ஆரம்பக்கல்வி**

இந்த நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் 13 பாடங்களிற்குப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அவையாவன.

**2.1.1. தொழில் தகைமைப் பாடங்கள்**

கல்வி உளவியல், கல்வியின் அடிப்படைகளும் பாடசாலை முகாமைத்துவமும், கல்வி அளவீடும் மதிப்பீடும் என்பனவாகும்.

**2.1.2. பிரதான பாடங்கள்**

- *. முதல்மொழிதமிழ்.
- *. கணிதம்
- *. சுற்றாடல்சார்செயற்பாடு
- *. இரண்டாம்மொழிசிங்களம்
- *. ஆங்கிலம்

**2.1.3. பொதுப் பாடங்கள்**

- *. அழகியல்கல்வி
- *. தகவல் தொழில்நுட்பம்
- *. சுகாதாரமும் உடற்கல்வியும்

**2.1.4. கற்பித்தல் பயிற்சி என்பனவாகும்.**

**2.2. இடைநிலைக் கல்வி**

இடைநிலைக் கல்விஆசிரிய மாணவர்கள் 14 பாடங்களிற்கு பரீட்சைக்குத் தோற்றவேண்டும்

**2.2.1. தொழிற்தகைமைப் பாடங்கள்**

- *. கல்விஉளவியல்
- *. கல்வியின் அடிப்படைகளும் பாடசாலை முகாமைத்துவமும்
- *. கல்வி அளவீடும் மதிப்பீடும்

**2.2.2. பிரதான பாடங்கள்**

இது பாடம்1, பாடம் 2, எனப் பாகுபடுத்தப் படும். பாடம் 1 இல் பிரதான பாடமும் அதன் முறையியலும், பாடம் 2 இல் துணைப்பாடமும், அதன் முறையியலும் உள்ளடக்கப்படும். மேலும் மனைப்பொருளியல், சங்கீதம் போன்ற கற்கை நெறிகளுக்கு செய்முறைப் பரீட்சையும் இடம் பெறும்.

**2.2.3. பொதுப் பாடங்கள்**

இதில் 06 பாடங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

- *. முதல்மொழிதமிழ்
- *. பொதுஆங்கிலம்
- *. சுகாதாரமும் உடற்கல்வியும்
- *. இரண்டாம் மொழிசிங்களம்
- *. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- *. அழகியல் என்பனவாகும்.

இவர்கள் பிரதான பாடம் அல்லது துணைப் பாடமாக முதல்மொழி தமிழ் பாடத்தினை கற்றிருந்தால் பொதுப்பாடத் தமிழ்ப் பரீட்சை யெடுக்கத் தேவையில்லை. மனைப்பொருளியல், சங்கீதம், இந்துசமயம் ஆகிய கற்கை நெறியில் கற்பவர்கள் பொதுப்பாடம் தமிழிற்கு பரீட்சைக்கு தோற்றுவதிலிருந்து விலக்களிக்கப் படுகின்றனர்.

**2.2.4. கற்பித்தல் பயிற்சி - என்பனவாகும்.**

### 03. மதிப்பீட்டு முறைகள்

#### 3.1. அறிமுகம்

மதிப்பீட்டானது உள்வாரியாகக் கணிப் பீட்டு அடிப்படையிலும் இறுதிப் பரீட்சைப் புள்ளி யினூடாகவும் மதிப்பிடப்படுகிறது.

உள்வாரி மதிப்பீட்டிற்கு 40 புள்ளிகள், இறுதிப் பரீட்சைப் புள்ளிகள் 60 புள்ளிகள், மொத்தமாக 100 புள்ளிகள்

இவ்வாறு பெறப்பட்ட புள்ளிகளிற்கு பின்வரு மாறு பெறுபேறுகள் தரப்படுத்தப்படும்

75 இற்குமேற்பட்ட புள்ளிகள் - A

65 இற்குமேற்பட்ட புள்ளிகள் - B

40 இற்குமேற்பட்ட புள்ளிகள் - C

40 இற்கு குறைவான புள்ளிகள் - F

கற்பித்தல் பயிற்சியானது இரண்டு வருட பயிற்சிக் காலத்தில் 40 வேலை நாட்கள் (08 கிழமை) கற்பித்தல் பயிற்சி இடம்பெறும். இத் தொகுதிக் கற்பித்தலானது நான்கு தடவைகள் இடம்பெறும். இவ்வேளைகளில் ஆசிரியர்கள் மதிப்பீட்டிற்குட்படுத்தப்படுவர். நான்கு தடவை களின் புள்ளிகளும் கூட்டப்பட்டு சராசரிப் புள்ளி களின் பெறுபேறுகளாக இலங்கை பரீட்சைத் திணைக்கள மதிப்பீட்டி பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டு அப்புள்ளிகள் பின்வருமாறு பெறு பேறுகளாக தரப்படுத்தப்படும்.

80 புள்ளிகளின் மேல் A

65 புள்ளிகளின் மேல் B

40 புள்ளிகளின் மேல் C

40 புள்ளிகளின் கீழ் F

இங்கு தொழில் தகைமைப் பாடங்கள், பிரதான பாடங்கள், துணைப் பாடங்கள் என்பன வற்றிற்கான இறுதிப் பரீட்சை இலங்கைப் பரீட் சைத் திணைக்கள மதிப்பீட்டு பிரிவில் மதிப்பீடு செய்யப்படும். பொதுப்பாடங்களுக்கான பரீட்சை தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும். இவை கலாசாலை ரீதியாக மதிப்பிடப்பட்டு இறு திப் புள்ளிகள் பரீட்சைத் திணைக்கள மதிப்பீட் டுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டு இறுதிப் பெறு பேறுகள் தீர்மானிக்கப்படும்.

### 04. பாட அடைவுகளின் நிலமைப் பகுப்பாய்வு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2019 ஆம் ஆண்டு 227 ஆசிரிய மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றினர். இவ் ஆசிரிய மாணவர் களின் (226 பேர்) 99.6% இனர் பரீட்சை யில் சித்தியடைந்துள்ளனர். மேலும் கடந்த பரீட்சை யில் நூனசித்தி பெற்றமையால் இரண்டாந் தடவை யாக பரீட்சைக்குத் தோற்றிய இரண்டு ஆசிரிய மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர் என்பதுவும் (100%) குறிப்பிடத்தக்கது.

#### 4.1. கற்கைநெறி ரீதியாகப் பரீட்சைக்குத் தோற்றியோர்.

ஆரம்பக் கல்வி - 127

இடைநிலைக் கல்வி - 100

வர்த்தக கல்வி - 07

கர்னாடக சங்கீதநெறி - 16

இந்துசமய நெறி - 22

விசேடகல்வி - 02

விவசாயம் - 18

மனைப்பொருளியல் - 14

கணிதநெறி - 21

#### 4.2. கலாசாலையின் சிறந்தபெறுபேறு

இங்கு கணிதம், வர்த்தகம், ஆரம்பக் கல்வி ஆகிய நெறிகளைச் சேர்ந்த மாணவர்கள் சிறந்தபெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். அதன் விபரம் வருமாறு

கணிதநெறி - நடேசன் தர்சன் 13A,1B, வர்த்தகநெறி - சுப்பிரமணியம் A.சோரா 13A, 1B, ஆரம்பக்கல்வி E- செல்விகுமரன் வித்தியா 12A, 1B, துவன் பௌரூக் சுலோஜினி 12A, 1B

#### 4.3. நெறி ரீதியாகச் சிறந்த பெறுபேறு

இங்கு 08 நெறிகளைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் 2019 இல் பரீட்சைக்குத் தோற்றினர். இவ்வாறு தோற்றிய மாணவர்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களின் பெயர் விப ரங்கள் நெறி ரீதியாக வருமாறு

கணிதநெறி- நடேசன் தர்சன் 13A,1B

வர்த்தக நெறி சுப்பிரமணியம் யசோரா 13A,1B,

விவசாயம் - தனுஸ்கோடி குகனேஸ் 9A,5B

தர்மலிங்கம் லோகேஸ்வரன் 9A, 5B

மனைப்பொருளியல் இரவீந்திரன் ஸ்ரீவித்தியா 10A, 4B

சங்கீதம் (கர்நாட்டிக்) உதயகுமார் சுகந்தினி 9A, 5B

விசேடகல்வி- ஜோசப் ஜெனீபா 9A, 5B

இந்துசமயம் - முருகையா பிரசாந்தன் 10A, 3B

ஆரம்பக் கல்வி- செல்வகுமரன் வித்தியா 12A, 1B

துவன் பௌரூக் சுலோஜனி 12A, 1B

## 4.4. பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரிய மாணவர்களின் பெறுபேறுகள் நூற்று வீதத்தில்.

| பாடம் | பாட இல. | தோற்றிய மாணவர்கள் | A | B | C | F |
|---|---|---|---|---|---|---|
| கல்விஉளவியல் | 01 | 227 | 18.1% | 81.1% | 0.9% | - |
| கல்வியின் அடிப்படைகளும் பாடசாலைமுகாமைத்துவமும் | 02 | 227 | 38.8% | 60.8% | 0.4% | - |
| கல்விஅளவீடும்,மதிப்பீடும் | 03 | 227 | 23.8% | 74.0% | 1.8% | 0.4% |
| கற்பித்தற் பயிற்சி | 98 | 227 | 25.6% | 73.1% | 1.3% | - |
| சுகாதாரமும்,உடற்கல்வியும் | 403 | 227 | 91.6% | 8.4% | - | - |
| ஆழகியல் | 404 | 227 | 49.8% | 50.2% | - | - |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் | 405 | 227 | 18.5% | 74.9% | 6.6% | - |
| பொதுஆங்கிலம் | 406 | 100 | 27.0% | 61.0% | 12.0% | - |
| இரண்டாம்மொழிசிங்களம் | 407 | 100 | 93.0% | 7.0% | - | - |
| முதல்மொழிதமிழ் | 402 | 48 | 95.8% | 4.2% | - | - |
| கணிதம் - 1 | 21 | 21 | 38.1% | 61.9% | - | - |
| கணிதம் - 11 | 22 | 21 | 33.3% | 61.9% | 4.8% | - |
| விவசாயம் - 1 | 31 | 18 | 88.9% | 11.1% | - | - |
| விவசாயம் - 11 | 32 | 18 | 16.7% | 83.3% | - | - |
| மனைப்பொருளியல் - 1 | 41 | 14 | 71.4% | 28.6% | - | - |
| மனைப்பொருளியல் - 11 | 42 | 14 | 71.4% | 28.6% | - | - |
| மனைப்பொருளியல் - 111 | 43 | 14 | 14.3% | 78.6% | 7.1% | - |
| கருநாடகசங்கீதம் - 1 | 81 | 16 | 18.8% | 81.3% | - | - |
| கருநாடகசங்கீதம் - 11 | 82 | 16 | 93.8% | 6.3% | - | - |
| கருநாடகசங்கீதம் செய்முறை | 83 | 16 | 25.0% | 68.8% | 6.3% | - |
| இந்துசமயம் - 1 | 201 | 22 | 54.5% | 45.5% | - | - |
| இந்துசமயம் - 11 | 202 | 22 | 45.5% | 54.5% | - | - |
| விசேடகல்வி - 1 | 161 | 2 | 100.0% | | - | - |
| விசேடகல்வி - 11 | 162 | 2 | 50.0% | 50.0% | - | - |
| வணிகவியல் - 1 | 131 | 7 | 42.9% | 57.1% | - | - |
| வணிகவியல் - 11 | 132 | 7 | 85.7% | 14.3% | - | - |
| மின்னாவனப்படுத்தலும்,சுருக்கெழுத்தும் - 1 | 133 | 7 | 100.0% | | - | - |
| மின்னாவனப்படுத்தலும்,சுருக்கெழுத்தும் - 11 | 134 | 7 | 100.0% | | - | - |
| சுற்றாடல் சார் செயற்பாடு - 1 | 166 | 2 | 100.0% | | - | - |
| சுற்றாடல் சார் செயற்பாடு - 11 | 167 | 2 | 100.0% | | - | - |
| முதல் மொழிதமிழ் - 1 | 116 | 52 | 40.4% | 59.6% | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சுற்றாடல் சார் செயற்பாடு - 1 | 166 | 2 | 100.0% | | - | - |
| சுற்றாடல் சார் செயற்பாடு - 11 | 167 | 2 | 100.0% | | - | - |
| முதல் மொழிதமிழ் - 1 | 116 | 52 | 40.4% | 59.6% | - | - |
| முதல் மொழிதமிழ் - 11 | 117 | 52 | 53.8% | 46.2% | - | - |
| விஞ்ஞானம் - 1 | 16 | 39 | 7.7% | 92.3% | - | - |
| விஞ்ஞானம் - 11 | 17 | 39 | 7.7% | 92.3% | - | - |
| முதல் மொழிதமிழ் - 1 | 241 | 127 | 53.5% | 46.5% | - | - |
| கணிதம் | 242 | 127 | 18.9% | 77.2% | 3.1% | - |
| சுற்றாடல் சார் செயற்பாடு | 243 | 127 | 90.6% | 9.4% | - | - |
| இந்துசமயம் | 245 | 112 | 57.1% | 42.9% | - | - |
| கிறிஸ்தவம் | 246 | 14 | 21.4% | 78.6% | - | - |
| இஸ்லாம் | 247 | 1 | 100.0% | | - | - |
| ஆங்கிலம் | 248 | 127 | 55.1% | 44.9% | - | - |
| இரண்டாம் மொழிசிங்களம் | 249 | 127 | 35.4% | 63.8% | 0.8% | - |


**5. பாடஅடைவுகளின் நிலமைப் பகுப்பாய்வு**

**5.1. தொகுதிரீதியாகநிலமைப் பகுப்பாய்வு**

**5.1.1.தொழில் தகைமைப் பாடங்களின் அடைவு மட்டப் பகுப்பாய்வு**

இங்கு தொழிற்தகைமைப் பாடங்களை எடுத்துக் கொண்டால் கல்வியின் அடிப்படைகளும் பாட சாலை முகாமைத்துவமும் என்ற பாடத்திலேயே பெறுபேறு 'A' இனைப் பெற்றோர் அதிக வீதத்தில் காணப்படுகின்றனர் (38.8%). அதேவேளை கல்விஉளவியலில் பெறுபேறு 'B' இனைப் பெற்றோர் (81%) அதிகமாக உள்ளனர். கல்வி அளவீடும், மதிப்பீடும் என்ற பாடத்தில் 0.4% சித்தியின்மையில் உள்ளனர். இதை பின்வரும் வரைபு காட்டி நிற்கின்றது.


**வரைபு 1 தொழிற்தகைமைப் பாடங்களின் அடைவுமட்டம்**



**5.1.2 பொதுப் பாடங்களின் அடைவுமட்டப் பகுப்பாய்வு**

இங்கு முதல்மொழி தமிழின் பெறுபேறு ‘A’ இனைப் பெற்றோர் 95.8% இனரும் இரண்டாம் மொழி சிங்களத்தில் பெறுபேறு ‘A’ இனைப் பெற்றோர் 93% இனரும் தகவல் தொழில் நுட்பத்தில் பெறுபேறு‘A’ இனைப் பெற்றோர் 18.5% இனரும், பொது ஆங்கிலத்தில் பெறுபேறு‘A’ இனைப் பெற்றோர் 27% மாகவும் காணப்படுகின்றனர். ஆனாலும் இங்கு சகலரும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இதை பின்வரும் வரைபு காட்டிநிற்கிறது

**வரைபு : 2 பொதுப் பாடங்களின் அடைவுமட்டம்**





**5.1.3 பிரதான பாடங்களின் அடைவுமட்டப குப்பாய்வு**

இங்கு பிரதான பாடம் விசேடகல்வி 1 இல் பெறுபேறு ‘A’ இனை 100% இனரும் கர் நாடக சங்கீதம் 11 இல் பெறுபேறு ‘A’ இனை 93.8 % இனரும் விவசாயம் 1 இல் பெறுபேறு ‘A’ இனை 88.9% இனரும் வணிகவியல் 11 இல் பெறுபேறு ‘A’ இனை 85.7% இனரும் பெற்றுள்ளனர்.

எவ்வாறாயினும் சகலரும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை பின்வரும் வரைபு காட்டிநிற்கிறது.


**வரைபு - 3 பிரதான பாடங்களின் அடைவுமட்டம்**



**5.1.4. துணைப் பாடங்களின் அடைவு மட்டங்களின் பகுப்பாய்வு**

இங்கு மின்னாவனப்படுத்தலும் சுருக்கெழுத்தும் 1, மின்னாவனப் படுத்தலும் சுருக்கெழுத்தும் 11, சுற்றாடல்சார் செயற்பாடு 1, சுற்றாடல்சார் செயற்பாடு 11 ஆகிய பாடங்களின் பெறுபேறு 'A' இனை 100% இனரும் பெற்றுள் ளனர். அது மட்டுமன்றி சகலரும் துணைப் பாடங்களில் சித்தியடைந்துள்ளனர். இதனை பின் வரும் வரைபு காட்டிநிற்கிறது.


**வரைபு - 4 துணைப் பாடங்களின் அடைவுமட்டம்**




**5.1.5. ஆரம்பக்கல்விப் பிரதான பாடங்களின் அடைவு மட்டப் பகுப்பாய்வு**

இங்கு இஸ்லாம் பாடத்தில் பெறுபேறு 'A' இனை 100% இனரும் பெற்றுள்ளனர். அத்துடன் சுற்றாடல் சார் செயற்பாடில் பெறுபேறு 'A' இனை 90.6% தினரும் பெற்றுள்ளனர். மேலும் சகலரும் சித்தியடைந்துள்ளனர். இதனை பின்வரும் வரைபு காட்டிநிற்கிறது.


**வரைபு : 5 ஆரம்பக் கல்விப் பிரதான பாடங்களின் அடைவுமட்டம்**



**5.1.6. கற்பித்தல் பயிற்சி அடைவு மட்டங்களின் பகுப்பாய்வு**

இங்கு கற்பித்தல் பயிற்சியின் அடைவு மட்டத்தில் பெறுபேறு 'A' இனை 23.8% இனரும், பெறுபேறு 'B' இனை 73.1% இனரும் பெற்றுள்ளனர். இங்கு சகலரும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இதனை பின்வரும் வரைபு காட்டி நிற்கிறது.

**வரைபு : 6 கற்பித்தல் பயிற்சி அடைவுமட்ட பகுப்பாய்வு**




## 6. முடிவுரை

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2019 ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சைப் பெறுபேறு களைஎடுத்து நோக்கின் முதலில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 99.6% இனர் சித்திய டைந்துள்ளனர். அதுமட்டுமன்றி அதியுயர் பெறு பேறு 'A' இனை 44.4% ஆசிரிய மாணவர்கள் பெற்றுள்ளமையானது ஆசிரியர்களின் வாண் மைத்துவம் வலுவூட்டப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது. அதுமட்டுமன்றி ஆசிரிய மாணவர்களின் ஆற்றுகை வெளிப்பாட்டினை கற்பித்தல் பயிற்சிப் பெறுபேறுகள் எடுத்தியம்பு கிறது. இங்கு பெறுபேறு 'A' இனை 23.8% தினர் பெற்றுள்ளமை ஆசிரிய மாணவர்களிற்கு ரிய சிறந்த வாண்மைத்துவப் பயிற்சியின் விளை திறனை வெளிக்காட்டுகின்றது.




உலக ஆசிரியர் நாளை ஒட்டி கலாசாலையின் 2019 - 2020 கல்வியாண்டில் பயிலும் ஆசிரிய மாண வர்கள் தமது விரிவுரை யாளர்களுக்கு ஆசிரியர் நாள் நினைவுப் பரிசிலாக பேனா தாங்கி வழங்கிக் கௌரவித்தனர். அத்தகைய பேனா தாங்கி ஒன்றையே படத்தில் காண்கின்றீர்கள்.

(நன்றி - விரிவுரையாளர் றஜிதா சின்னத்துரை)

# வேண்டுவார்க்கு வேண்டும் வரமருளும் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன்



வற்றாப்பளை என்பது இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய கிராமங்களுக்கு அருகில் இருக்கும் ஊர். இங்குள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் புகழ்பெற்றது. வன்னி நாட்டின் காவல் தெய்வமாகவும் தாய்த் தெய்வமாகவும் இந்த அம்மனை வழிபட்டு வருகின்றனர். வைகாசி மாதத்தில் பூரணை நாளை அடுத்துவரும் திங்கள் நாளில் இங்கு நிகழும் பொங்கல் விழாவிற்கு ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் வந்து கூடுவர். இந்தத் தலத்தின் வரலாற்று மரபின் படி கண்ணகி என்ற பத்தினி தெய்வத்தையே கண்ணகி அம்மனாக வழிபடுகின்றனர். இத் தெய்வத்தின் வரலாற்றைப் பேசும் சிலம்பு கூறல் என்ற ஏட்டு இலக்கியம் வைகாசிப் பொங்கல் நாளில் இங்கு படிக்கப்படுவது சிறப்பம்சமாகும்.

கண்ணகி அம்மன் பொங்கல் நிகழ்வானது அயற்கிராமமான முள்ளியவளை காட்டா விநாயகரோடு தொடர்புடையதாகும். வற்றாப்பளை அம்மன் பொங்கல் நிகழ்வு நிகழ்வதற்கு முன்னர் உள்ள ஏழு நாட்களுக்கு காட்டா விநாயகர் ஆலயத்தில் இந்த அம்மனை ஸ்தாபித்து அவருக்கு மடை மற்றும் பொங்கல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படும். நீரில் விளக்கெரித்தல் என்ற அற்புதம் நிகழ்த்தப்படுகிறது. இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட பழைமை வாய்ந்த பத்தாவது கோவிலாக கண்ணகியம்மாள் கோவில் கருதப்படுகிறது. பளை என்பது தங்குமிடத்தைக் குறிக்கும். பத்தாவது இடமாகிய பத்தாம்பளை என்பது மருவி வற்றாப்பளை ஆயிற்று என்பது வரலாறு. முன்பு ஒரு காலத்தில் நந்திக்கடலோரத்தில் ஆட்டிடையர்குலச் சிறுவர்கள் ஒரு முதுமை வாய்ந்த அம்மையார் ஒருத்தி இருப்பதைக் கண்டார்கள். தனக்கு தங்குவதற்கு இடமில்லை என அந்த அம்மையார் சிறுவர்களுக்கு முறையிட்டபோது அவர்கள்

சுபாசினி தயாளன்
ஆரம்பக்கல்வி - 4,
ஆசிரிய மாணவி
வற்றாப்பளை.



மரத்திற்கு அருகே குடிசை அமைத்துக் கொடுத்தது மட்டுமன்றி அம்மையாருக்கு உண்பதற்கு பொங்கலும் செய்து கொடுத்தார்கள்.


மாலைப் பொழுதானதும் குடிசைக்குள் விளக்கேற்றுவதற்கு எண்ணெய் இல்லையே என்று மனம் வருந்தினர். அவர்கள் கவலைப்படுவதைக் கண்ட அம் மூதாட்டியார் பிள்ளைகளே கடல்நீரை எடுத்து எண்ணெயாகப் பாவித்து திரி வைத்து விளக்கேற்றுங்கள் என்றார். இந்தச் செயற்



பாடு இன்றும் கடல்நீரில் விளக்கெரிக்கின்ற வழக்கமாய்த் தொடர்ந்து வருகின்றது.

அது மாத்திரமல்லாமல் அம் மூதாட்டி அந்தச் சிறுவனைப் பார்த்து தனக்கு பேன் பார்த்து விடும்படி கூறினார். அவர் தலை முடியை வகுந்த சிறுவர்கள் தலையெல்லாம் கண்ணாக இருக்கக்கண்டு பயந்து அலற நான் ஒரு வைகாசித் திங்கள் வருவேன் என்று கூறி அம் மூதாட்டி மறைந்தார். சிறுவர்கள் ஊருக்குள் ஓடிச்சென்று ஊர் மக்களிடம் விடயத்தைச் சொல்ல ஊர் திரண்டு வந்து வணங்கி கண்ணகி அம்மன் கோவிலைக் கட்டினார்கள் என்பது செவிவழியாக மொழி வழியாக கூறப்படும் கதையாகும்.

போர்த்துக்கேயர் தம் மதத்தை தவிர வேறு மதங்களை மதிக்காதவர்கள். பல இந்துக் கோவில்களையும் புத்த விகாரைகளையும் இடித்து தள்ளியவர்கள் என்கிறது வரலாறு. போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டபோது முல்லைத்தீவும் அவர்களின் ஆட்சிக்கு கீழ் இருந்தது. ஒரு போர்த்துக்கேய அதிகாரி ஒவ்வொரு முறையும் கோவிலை குதிரையால் தாண்டிச் செல்லும்போது அம்மனைப் பரிகாசம் செய்வாராம். ஒருநாள் கண்ணகி அம்மன் கோவில் அருகே வந்தபோது எங்கே உங்கள் கடவுள்? அதிசயங்கள் செய்வதாகக் கேள்விப்பட்டேன் அது உண்மையானால் எங்கே இப்போது செய்து காட்டட்டும் என்றார். பனிச்ச மரத்தின் கீழ் குதிரையில் அமர்ந்தபடியே அம்மனை அககங்காரத்தோடு சுற்றினார். உடனே பனிச்சமரம் குலுங்கத் தொடங்கியது. காற்று பயங்கரமாக வீசத் தொடங்கியது. மரத்தில் இருந்த பனிச்சம் காய்கள் அம்மனை பரிகாசம் செய்த அதிகாரி மேல் விழுந்தன. பனிச்சம் காய்களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது அதிகாரி காயமடைந்து குதிரையிலிருந்து மூர்ச்சித்து கீழே விழுந்தான். அவன் அகங்காரம் அடங்கியது. அதன்பின் இன்று வரை அப்பனிச்ச மரம் பூப்பதும் இல்லை காய்ப்பதும் இல்லை. அதுவும் அம்மனின்





அதிசயங்களில் ஒன்று. இவ்வாறு அம்மனின் அதிசயங்கள் பலவற்றைக் கூறிக்கொண்டே போகலாம். வற்றாப்பளை அம்மன் அம்மை, பொக்கிளிப்பான், சின்னமுத்து, கண்ணோய் போன்ற நோய்களைக் குணப்படுத்துவாள் என்பது நம்பிக்கை. ஆலயத்தில் வழங்கப்படும் பிரசாதம் மக்களைக் காப்பாற்றும் அருமருந்து என்பது அடியார்களின் அனுபவ நிலைப்பட்ட முடிவாகும்.

ஆலயத்தில் பெரும் திருப்பணிகள் அண்மைக் காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2011 இல் இராஜகோபுர மணிக்கோபுர மகாகும்பாபிசேஷகம் இடம்பெற்றது. 2018 இல் ஆலயத்தின் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது. தற்போது ஆலயத்தின் உட்பிரகாரம் கிரனைட் கருங்கல் கொண்டு பதிப்பக்கப்பட்டு அழகுறக் காட்சிதருகின்றது.

ஆண்டுதோறும் வைகாசிப் பூரணையை அண்மித்த திங்கட்கிழமை பொங்கல் கோலாகலமாக நடைபெறும். பொங்கலுக்கு ஒருவாரம் முன்பதாகவே வற்றாப்பளையும் அயற்கிராமங்களும் வழிபாட்டுக் கோலங்களால் களைகட்டிவிடும். யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதியில் தொடங்கும் கதிர்காமக் கந்தனை நோக்கிய பாதயாத்திரை வற்றாப்பளை அம்மன் பொங்கல் தரிசனம் காணும். அதன் பின்னர் பக்தியுடன் கிழக்கிலங்கை வழியாகக் கதிர்காமம் நோக்கித்தொடரும். ஆகமம் சாராத வழிபாட்டு நிலைக்கு முதன்மை கொடுத்து ஆகமக் கிரியைகள் நிறைவேறும் தலமாக வன்னிப் பெருநிலப்பரப்பின் மிகப்பெரும் பக்தி மையமாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தைத் தரிசிக்கலாம்.

# இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவைக்காகத் தற்போது விண்ணப்பிக்கலாம்

தேசிய கல்வியியற்கல்லூரி, ஆசிரிய கலா சாலை, ஆசிரிய மத்திய நிலையம் என்பவற்றில் விரிவுரையாளராகப் பணியாற்றுபவர்கள் இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையைச் சேர்ந்த உத்தி யோகத்தர்களாக உள்ளனர். இந்தச் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவுத் திகதி 26.11.2020 ஆகும். இந்நிலையில் இச்சேவைக் கான ஆட்சேர்ப்புக் குறித்துச் சில தகவல்கள் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றன.

### அறிமுகம்

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் திறந்த மற்றும் மட்டுப்படத்தப்பட்ட சேவைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை (மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையிலான விண்ணப்பங்கள்) பற்றி நோக்குவோம்

*. மொத்த உள்ளிரப்பு - 706 பேர் (சிங்கள மொழி மூலம் 340 தமிழ்மொழி மூலம் 233, ஆங்கில மொழி மூலம் 133)

*. 2020.10.23 ஆம் திகதி அரச வர்த்தமானி ஊடாக விண்ணப்ப முடிவுத் திகதி 2020.11.26 வரை நீடிக் கப்பட்டுள்ளது.

*. ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண் ணப்பிக்க தேவையில்லை.

*. புதிய சீர்திருத்தத்தின் படி, இம்முறை மாத்தி ரம் விண்ணப்ப வயதெல்லை 50 ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது. எனவே 1970.11.06 இக்கு பின் பிறந்த வர்கள் விண்ணப்பிக்க முடியும்.

### விண்ணப்பிக்க தகுதி பெறுவோர்

*. இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) அலுவலர்கள்

*. இலங்கை அதிபர் சேவை (SLPS) அலுவலர்கள்

*. இலங்கை ஆசிரியர் சேவையைச் (SLTS) சேர்ந்தவர்கள்.

### அனுபவம்

*. 5 வருட சேவை அனுபவத்தைக் கொண்டி ருக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு அல் லது பல சேவைகளை இணைத்து இந்த 5 வருடம் கணிப்பிடப்படும்.

*. 5 வருடங்களில் சம்பள அதிகரிப்பு உரிய திகதி களில் பெற்றிருக்க வேண்டும்.

### பரீட்சைக்கான பாடங்கள்

*. நுண்ணறிவும் கிரகித்தலும்

*. விடய ஆய்வு

*. கல்வி மூலதத்துவங்கள்

### கல்வித் தகைமை (பாடங்களின் அடிப்படையில் வேறுபடும்)

*. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (சில பாடங்களுக்கு மாத்திரம்)

*. குறிப்பிட்ட பாடத்துறைகள் சார்ந்து வகுப்புடன் பட்டம்

*. குறிப்பிட்ட பாடத்துறைகள் சார்ந்த பட்டத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா

சம்பளத்திட்டம்

*. ஆரம்ப சம்பளம் ரூபா 47615 அத்துடன் வாழ்க் கைச் செலவுக் கொடுப்பனவுனவுகள்

இதைவிட

*. வாண்மைக் கொடுப்பனவு

*. தொலைத்தொடர்புக் கொடுப்பனவு என்பனவற் றையும் பெறமுடியும்.

முதல் 6 வருடங்களிலும் அதன் பின்னர் ஒவ் வொரு 5 வருடங்களிலும் வரியற்ற வாகன இறக்கு மதிக்கான அனுமதிப்பத்திரம் பெற முடியும்.

இந்தப் பரீட்சையில் சித்திபெற்ற பின்னர் தகுதிகாண் மதிப்பீடு நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுக்க வேண்டும்.

இதில் கற்பித்தல் பிரயோகப் பரீட்சை நடைபெறும். இதற்கு 50 புள்ளிகள் உண்டு.

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை (திறந்த அடிப்படையிலான விண்ணப்பம்) 2020.10.23 வர்த்தமானியின்படி விண்ணப்ப முடிவுத் திகதி 2020.11.06 இதற்கு முன்னர் விண் ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை

வயதெல்லை

*. 2020.03.06 அன்று 35 வயதிற்கு குறைந்தவர்கள்

*. அனைத்து தகுதிகளையும் 2020.03.06க்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

### பாடங்கள்

*. பொதுஅறிவும் நுண்ணறிவும்

*. கிரகித்தல்

*. விடய ஆய்வு

தொடர்ச்சி பக்-27

# இலங்கை ஆசிரிய சேவை தொடர்பாகச் சில அடிப்படைத் தகவல்கள்




இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்ட நாள் - *06.10.1994* (இதுவே இலங்கையில் ஆசிரிய தினமாகக் கொண்டாடப்படுகின்றது)

முதலாவது சேவைப் பிரமாணக் குறிப்பு - *843/4* இலக்க *1994.10.31* ஆம் திகதிய வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டது. தற்போது *1885/38* ஆம் இலக்க *23.10.2014* ஆம் திகதிய வர்த்தமானி மூலமும் *2120/02* அம் இலக்க *02.04.2019* ஆம் திகதிய வர்த்தமானி மூலமும் வெளியிடப்பட்ட ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்புத் திருத்தங்கள் நடைமுறையில் உள்ளன.



**ச.லலீசன்**
**பிரதி அதிபர்,**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**

இலங்கையில் கல்வி அமைச்சின் கீழ் உள்ள கல்விச் சேவை வகைகளாவன,

*. இலங்கை கல்வி நிர்வாக சேவை - SLEAS
*. இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவை-SLTES
*. இலங்கை அதிபர் சேவை - SLPS
*. இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை - SLTAS
*. இலங்கை ஆசிரிய சேவை – SLTS
*. இலங்கைப் பரீட்சைத் திணைக்கள தொழினுட்ப வியலாளர் சேவை.

**இலங்கை ஆசிரிய சேவையின் தரங்கள்**

*. தரம் 1
*. தரம் 2 – I
*. தரம் 2 – II – ப ட்டம் + டிப்புளோமா / பயிற்சி அல்லது B.Ed.
*. தரம் 3 – I – அ – பட்டதாரி
*. தரம் 3 – I – ஆ – ஆசிரிய கலாசாலை, கல்விக் கல்லூரி பயிற்சி பெற்றவர்



**வே.சேந்தன்**
**விரிவுரையாளர்,**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**

*. தரம் 3 – I - இ - போதனாவியல் சார்ந்த 2 வருட டிப்புளோமா படித்தவர் (ஆங்கில டிப்புளோமா மீன்பிடி டிப்புளோமா அல்லது உடற் கல்வி டிப்புளோமா படித்தவர்)

தரம் 3 – II – உதாரணமாக – G.C.E. (A/L) உடன் உள்வாங்கப்படுபவர்கள். (தொண்டர் அடிப்படையில் இருந்து அல்லது போட்டிப் பரீட்சை மூலம்)

ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கான அடிப்படைத்தகுதி க.பொ.த. உயர்தரத்தில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி (S) அத்துடன் (சாதாரண தரத்தில் கணிதம் சித்தி (S) தாய் மொழி திறமைச்சித்தி (C) உட்பட 3C 3S பெற்றிருக்க வேண்டும்.

*. ஆசிரிய சேவைக்கான சம்பள வகுதி – GE 01 / 2016 (SLTS 3 II மற்றும் 3 I இற்குரியது.
- GE 02 / 2016 (SLTS 2 II இலிருந்து வகுப்பு 1 வரை)

**[illegible]**

இப்பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு பிரயோகப்பரீட்சை உண்டு அதற்கு பின்வரும் அடிப்படையில் புள்ளி வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்ச புள்ளிகள் அளவு | குறைந்தபட்சப் புள்ளிகள் |
|---|---|---|
| நுழைவு | 05 | 20 |
| விடய உள்ளடக்கம் | 20 | |
| முன்வைக்கும் பாங்கு | 10 | |
| நேரமுகாமைத்துவம் | 10 | |
| சாராம்சப்படுத்தல் | 05 | |
| மொத்தம் | 50 | |

**குறிப்பு:** பதவி உயர்வு என்பதற்கு உதாரணம் ஆசிரிய சேவை 3 II இல் உள்ள ஒருவர் ஆசிரிய சேவை 3 I ஆ இனை அடைதல்.

பதவி மாற்றம் என்பது ஆசிரிய சேவையில் உள்ள ஒருவர் - அதிபர் சேவை அலுவலராதல் (உத்தியோக பூர்வமாக இதனைப் பதவி உயர்வு என்று சொல்வதில்லை)

**ஆசிரிய சேவை தரம் 3 இற்கான சம்பள அளவுத் திட்டம்.**

ரூபா 27740 - 6 x 300 - 7 x 380 - 2 x 445 = 33090

தரம் 3 இல் உள்ள ஆசிரியர் A/L உடன் நியமனம் பெறும் போது 3– II இல் முதலாவது சம்பளப்படி நிலையிலும். 3– I இ இல் நியமனம் பெறும்போது (டிப்புளோமா செய்தவர்) - தரம் 3 இன் 7 ஆவது சம்பளப்படி நிலையிலும், 3–I ஆ - ஆசிரிய கலாசாலைப் பயிற்சி பெற்றவர் - 9 ஆவது சம்பளப்படி நிலையிலும், கல்விக் கல்லூரி டிப்புளோமா பயிற்சி பெற்றவர் - 11 ஆவது சம்பளப்படி நிலையிலும், 3–I அ - பட்டதாரி ஆயின் 14 ஆவது சம்பளப்படி நிலையிலும் நிலைப்படுத்தப்படுவார்.

(தற்போது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் வாழ்க்கைச் செலவுப் படியாக (COLA) ரூபா 7800 வழங்கப்படுகின்றது.

விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்காக (W&OP) அடிப்படைச் சம்பளத்தில் 6% கழிக்கப்படும். அத்துடன் முத்திரை வரியாக ரூபா 25 கழிக்கப்படும். (ரூபா25000 இற்கு மேல் சம்பளம் பெறுபவருக்கு முத்திரை வரி உண்டு)

**ஆசிரியர் எவ்வாறு பதவி உயர்வைப் பெறலாம்**

தரம் 3-II இல் உள்ளவர் - பயிற்சி பெற்று அல்லது பட்டதாரி ஆகி தரம் 3 I இற்கு உயரலாம்.

தரம் 3 I இல் உள்ளவர் 3 வருட சேவைக் காலம் பூர்த்தி செய்வதுடன் நுடீக்கான 01 – 07 இத வடிவங்களைப் (Module களைப்) பூர்த்தி செய்வதுடன் வினைத்திறன் செயலாற்றுகையை பூர்த்தி செய்வதன் வாயிலாக தரம் 2 II இற்கு உயரலாம்.

**குறிப்பு**

இலங்கை ஆசிரிய சேவை 3–I (ஆ) இற்கு நியமிக்கப்பட்டவர் (கலாசாலை அல்லது கல்விக் கல்லூரி முடித்தவர்) பட்டத்தகைமை (B.A./ B.Sc/ B.Com) அல்லது கல்விமாணிப் (B.Ed.) பட்டத்தைப் பெறும் போது SLTS 2 – II இன் 3 ஆவது படிநிலையில் அமர்த்தப்படுவார்.

இலங்கை ஆசிரிய சேவை 3–I அ தரத்தில் உள்ள ஆசிரியர் (பயிற்றப்படாத பட்டதாரி) பட்டப் பின் கல்வி டிப்புளோமா அல்லது கல்வி மாணியை (அல்லது கலாசாலை சான்றிதழை) நிறைவு செய்யும் திகதியில் இருந்து SLTS 2 – II இன் 05 ஆவது படிநிலையில் உள்வாங்கப்படுவார். தரம் 2-II இல் உள்ளவர் 07 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்வதுடன் முதல் 4 வருடங்களில் நுடீக்கான 08-14 Module களைப்




பூர்த்தி செய்வதுடன் வினைத்திறன் செயலாற்றுகையை பூர்த்தி செய்வதன் வாயிலாக தரம் 2-I இற்கு உயரலாம். (இக்காலப் பகுதிக்குள் முதல் 5 வருடங்களில் M.Ed. பூர்த்தி செய்தால் 5 வருட சேவைக்காலம் மற்றும் நுடீயுடன் தரம் 2 -I இற்கு உயரலாம்)

தரம் 2-I இல் உள்ளவர் 06 வருட சேவைக் காலம் அதில் முதல் 4 வருடங்களில் நுடீ module 14-20 மற்றும் வினைத்திறன் செயலாற்றுகை என்பவற்றைப் பூர்த்தி செய்வதன் வாயிலாக தரம் 1 இற்கான பதவி உயர்வைப் பெறலாம்.

**குறிப்பு**

01.07.2007 இற்கு பின்னர் நியமனம் பெற்றவர் அரச கருமமொழிகள் திணைக்களப் பரீட்சையில் 3 ஆம் தரத்தில் (வாய்மொழிப் பரீட்சை உட்பட) சித்திபெற்றிருக்க வேண்டும். ஆயினும் அண்மையில் திருத்தப்பட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் (18/2020) ஆசிரியர்கள் 150 மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறியைத் தொடர்ந்து அதன்பின் நடத்தப்படும் எழுத்து மற்றும் வாய்மொழித் தேர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அத்துடன் சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ஆசிரியர்களது பதவி எதிர்கால உயர்வுக்கு வழிகோலும்).

# பிரயோகத்தமிழ் எது சரி எது பிழை

## (தமிழ்மொழிப் பிரயோகம் பற்றிய ஒரு விழிப்புணர்வுத் தொடர்)



வேல்நந்தகுமார்
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

01

இன்றைய அச்சு, இலத்திரனியல் சூழலிலும் கற்றல் - கற்பித்தல் சூழலிலும் எமது தாய் மொழியாகிய தமிழ் மொழியின் பிரயோக நிலை சார்ந்து பல்வேறுபட்ட பிழைகள் மலிந்து வருவதைக் காணமுடிகிறது. தமிழ் மொழியானது தனக்கெனத் தொன்மையானதொரு இலக்கணப் பாரம்பரியத்தை கொண்டு விளங்கும் அதே வேளை பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு என இரு வகைப்பட்ட வழக்கு நிலைகளைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. இதில் பேச்சுவழக்கு பிரதேச, பிரயோக வேறுபாடுகளைக் கொண்டிருக்க முடியும். ஆனால் எழுத்து வழக்கு என்பது நியமமானது. அதில் எந்த வேறுபாடுகளுக்கும் இடமில்லை. ஆக்க இலக்கியம் சார், புனைகதைசார் எழுத்துக்களில் பேச்சுவழக்கை, இலக்கணமீறல்களைக் கையாள்வது தவறல்ல. ஆனால் அவற்றைத் தாண்டிய பிரயோகத் தமிழில் பிழைவிட்டு எழுதுவதை மன்னிக்க முடியாது.

எழுத்துப் பிழைகளற்ற தமிழால் இன்றைக்கும் எம் மண்ணிற்கு பெருமை சேர்க்கும் வசனநடை கைவந்த வல்லாளர் ஆறுமுகநாவலர் தோன்றிய மண்ணில் இருந்து வெளிவருகின்ற இன்றைய பத்திரிகைகளிலும், பாடநூல்களிலும் எழுத்துப் பிழைகள் மலிந்து வருவது வேதனைக்குரியது. குறிப்பாக இன்று அதிகளவானோர் பயன்படுத்தும் சமூக வலைத்தள வெளிகளிலும் ஆங்கிலத் தமிழ்க்கலப்புமொழி பிரயோகம், தமிழ் எழுத்துபிழைகள் மலிந்து வருவதைக் காணமுடிகிறது. பொதுவாக இவற்றுக்கு சம்பந்தப்பட்ட கருவிகளே பொறுப்பு நாமல்ல, என தட்டிக்கழிக்கும் போக்கையும் காணமுடிகிறது. எனவே எமது அடுத்த தலைமுறைக்கு பிழைகளற்ற சரியான எம் தமிழை கையளிக்கும் நோக்குடனும் எமது மொழிசார் பிரயோகம் சார்ந்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் எமது கலாசாலையின் இம்மின்னிதழில் தொடர்ச்சியாக தமிழ் மொழியின் பிரயோகப் பிழைகளையும் அவற்றுக்குரிய இலக்கண ரீதியிலான விளக்கங்களையும் புதிய கலைச் சொற்களையும் உங்களோடு பகிர்ந்துகொள்ளலாம் என எண்ணுகிறேன். அந்த வகையில் முதலில் எழுத்து வழுக்கள் கொண்ட சொற்களில் இருந்து தொடங்குகின்றேன்.

| பிழையான வழக்கு | சரியான வழக்கு |
|---|---|
| நாகரீகம் | நாகரிகம் |
| புடவை | புடைவை |
| முன்னூறு | முந்நூறு |
| பேரூந்து | பேருந்து |
| தீவட்டி | தீவர்த்தி |
| சந்தணம் | சந்தனம் |
| சீயாக்காய் | சிகைக்காய் |
| சுகயீனம் | சுகவீனம் |
| பன்னிரெண்டு | பன்னிரண்டு |
| செலவாணி | செலாவணி |
| கைமாத்து | கைம்மாற்று |
| நிலமை | நிலைமை |
| மடைமை | மடமை |
| கல்வியியல்த்துறை | கல்வியியற்றுறை |
| வாழ்த்துக்கள் | வாழ்த்துகள் |
| அனுப்புனர் | அனுப்புநர் |
| பிரச்சனை | பிரச்சினை |
| பாவக்காய் | பாகற்காய் |
| வாசல்ப்படி | வாசற்படி |
| கற்றல்ப்பேறு | கற்றற்பேறு |
| செயல்த்திறன் | செயற்றிறன் |
| செயல்த்திட்டம் | செயற்றிட்டம் |
| பிரச்சாரம் | பிரசாரம் |
| முதுமானி | முதுமாணி |
| கட்டிடம் | கட்டடம் |

# ஆசிரிய மாணவருக்கான இணையவழிப் போதனை வெற்றிகரமாக முன்னெடுப்பு





2019 - 2020 கல்வியாண்டு மாணவர்களுக்கான போதனை தற்போதைய கொவிட் - 19 அச்சுறுத்தல் காரணமாக இணைய வழியிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கலாசாலையின் வேலை நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை சூம் செயலியைப் பயன்படுத்தி இந்த வகுப்புகள் விரிவுரையாளர்களால் எடுக்கப்படுகின்றன. இதற்கான சூம் செயலி வசதியை கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் வ.சி.குணசீலன் ஏற்படுத்தித்தந்துள்ளார். பிரதி அதிபர் ச.லலீசனின் ஒழுங்கமைப்பில் வகுப்புகள் விரிவுரையாளர்களால் முன்னெடுக்கப்படுகின்றன. விரிவுரையாளர்களான மாலதி பத்மநாதன் மற்றும் தர்சினி முத்துராஜா ஆகியோர் விரிவுரைகளை முன்னெடுப்பதற்கான தொழினுட்ப உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர். 377 ஆசிரிய மாணவர்கள் தற்போது கலாசாலையில் கல்விபயிலும் நிலையில் தினமும் 330 பேர் வரையில் இணைய வழியில் இணைந்து கற்கின்றனர் என்றும் இவர்களுள் பெரும்பாலானோர் தமது திறன் தொலைபேசியைப் பயன்படுத்தியே இணைந்து கற்கின்றனர் என்றும் கலாசாலையின் பிரதி அதிபர் தெரிவித்தார்.

# கொரோனா காலத்தில் இணையவழி மூலம் கற்பிக்கும் 91 வயது ஆசிரியர்



கொரோனா காலத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த 91 வயது ஆசிரியர் சார்லஸ் க்ரான், இணையவழி மூலம் கற்பிக்கும் படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. அமெரிக்காவில் மின்னஸோட்டா பகுதியைச் சேர்ந்தவர் சார்லஸ் க்ரான். 91 வயதான இவர் சென்தோமஸ் பல் கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியர். 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்த அவர், கொரோனா காரணமாக வீட்டில் முடங்கினார். இணைய வகுப்புகளைக் கையாளவும் தடுமாறினார்.

இதை அறிந்த அவரின் மகள் ஜூலியா, ஜஸ்டனில் இருக்கும் தனது வீட்டுக்குத் தந்தையை அழைத்துச் சென்றார். அங்கே ஒன்லைன் மூலம் எப்படிக் கற்பிப்பது என்பதை உரிய உபகரணங்களுடன் விளக்கினார். மெய்நிகர் வகுப்பறை (online) முறையைத் துரிதமாகக் கற்றுக் கொண்டார் சார்லஸ். தனது மாணவர்களுக்கு ஆங்கில வகுப்பெடுக்க ஆரம்பித்தார்.

இது குறித்துப் புகைப்படம் எடுத்த ஜூலியா, அதைத் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டார். அத்துடன், ஹோமரின் 'தி ஒடிசி' பாடத்தினை என் தந்தை கற்பிப்பதை 20 ஆண்டுகளுக்குப் பிறகு நேரடியாகப் பார்க்கிறேன். இதுதான் உண்மையான பரிசு. 50 ஆண்டுகளுக்கும் மேல் கற்பித்தாலும் இன்னும் ஆசிரியப் பணி மீதான ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் முதல்முறை போலக் காட்டுகிறார் என்று தெரிவித்தார்.

(நன்றி: இணையம்)





கலாசாலையில் உள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விஜயதசமி நாளில் (25.10.2020) மானம்பு உற்சவமும் வித்தியாரம்ப நிகழ்வும் இடம்பெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வி.செல்வசேனக் குருக்கள் கிரியைகளை நடத்தினார்



கலாசாலையில் அண்மையில் வெளிவந்த 2019 இறுதிப் பரீட்சைப் பெறுபேறு தொடர்பான நிலை மைப் பகுப்பாய்வை விரிவுரையாளர்கள் மத்தி யில் விரிவுரையாளர் சத்தியா ரஞ்சித் முன்வைப் புச் செய்தார்.




கலாசாலையின் கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற் றும் விரிவுரையாளர்களுக்கான அலுவலக முகாமைத் துவம் தொடர்பான கருத்தரங்கு 13.10.2020 அன்று நடைபெற்றது. வளவாளராக நிர்வாக உத்தியோகத் தர் மே.சாந்தசீலன் கலந்துகொண்டார்.



கலாசாலையில் துணை அதிபராகப் பணியாற்றி அகவை 60 கண்ட சிவசக்தி இராதகிருஸ்ண னின் பிறந்த நாளன்று (25.10.2020) கலாசாலை விரிவுரையாளர்கள் பலர் அவரது வீட்டிற்குச் சென்று வாழ்த்தினர்.



1952 இல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் எடுக்கப்பட்ட படத்தையே காண்கின்றீர்கள். அப்போதைய கலாசாலை அதிபர் செல்வி முருகேசு, மற்றும் புகழ்பெற்ற விரிவுரையாளர்களாக திருமதி ரதிலட்சுமி ஆனந்தகுமாரசுவாமி, செல்வி சந்தனநங்கை கந்தப்பு (எழுத்தாளர்), பண்டிதர் இராசையா (கலாசாலை கீதம் எழுதியவர்) போன்றோர் படத்தில் உள்ளனர்.



திறன் பலகைப் (Smart board) பயன்பாட்டை வினைத்திறனுடன் கையாளுவது தொடர்பாகத் தனது அனுபவங்களை யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் திரு ரமணன் கலாசாலை விரிவுரையாளர்களுடன் பகிர்ந்துகொண்டார்



மித்திரிவெலவில் (அவிசாவளை அருகில்) மூன்று நாள்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற சற்றிபாசல (Sati Pasala – உளவிழிப்புணர்வு பாடசாலை) தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்ட கலாசாலையின் விரிவுரையாளர்களான வே.சேந்தன், சுஜீவா அருள்லிங்கம் ஆகியோர் தமது அனுபவங்களை விரிவுரையாளர்களுடன் பகிர்ந்துகொண்டதுடன் தியானத்தின் ஊடாக உள விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாகவும் கருத்துக்களை உரைத்தனர்.





கலாசாலையில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வின்போது...

இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரிய கலாசாலையால் 01.11.2020 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது.